15.10.2015

# தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### பருப்பு இறக்குமதியை அதிகரிக்க மத்திய அரசு முடிவு!




**புதுடில்லி** : பருப்பு விலை ரூ.190ஆக உயர்ந்ததையடுத்து, பருப்பு விலையை கட்டுப்படுத்த கூடுதலாக 2 ஆயிரம் டன் இறக்குமதி செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது. கடந்த சில வாரங்களாக பருப்பின் விலை ரூ.100லிருந்து படிப்படியாக அதிகரித்து தற்போது ரூ.190க்கு விற்பனையாகிறது. மேலும் பருப்பு விநியோகத்தில் தட்டுப்பாடும் நிலவி வருகிறது. இந்நிலையில் புதுடில்லியில் நேற்று(14-10-15) நிதியமைச்சர் அருண் ஜெட்லி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சர்கள் கூட்டத்தில், பருப்பு விலை கட்டுப்படுத்துவது தொடர்பாக விவாதிக்கப்பட்டது.கூட்ட முடிவில் மத்திய வர்த்தக துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்ட 5 ஆயிரம் டன் பருப்புகளில் துறைமுகங்களில்

இருப்பு வைக்கப்பட்டுள்ளன. மேலும் கூடுதலாக 2 ஆயிரம் டன் பருப்பு இறக்குமதிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் விரைவில் கோரப்படவுள்ளன. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

பருப்பு விலை உயர்வு குறித்து மத்திய நிதியமைச்சர் அருண் ஜெட்லி செய்தியாளர்களிடம் கூறுகையில், உயர்ந்து வரும் பருப்பு விலையை கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தட்டுப்பாட்டை தடுக்க பருப்பு இறக்குமதியை அதிகரிக்கவும், விலைக்கட்டுப்பாட்டு நிதியை பயன்படுத்தி, பருப்பின் விலையைக் குறைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## பெங்களூருக்கு காவிரி நீர்ரூ.5,500 கோடியில் திட்டம்

பெங்களூரு:-“பி.பி.எம்.பி.,யில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள, 110 கிராமங்கள் உட்பட மொத்த பெங்களூருக்கும், காவிரி தண்ணீர் வினியோகம் செய்யவும், பாதாள சாக்கடை வசதி ஏற்படுத்தவும், 5,500 கோடி ரூபாய் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது,” என, போக்குவரத்து துறை அமைச்சர் ராமலிங்க ரெட்டி தெரிவித்தார்.பெங்களூரு விதான் சவுதாவில், நிருபர்களிடம் அவர் கூறியதாவது:பெங்களூரின் அனைத்து மக்களுக்கும் காவிரி தண்ணீர் வினியோகம் செய்யவும், பாதாள சாக்கடை வசதியை ஏற்படுத்தவும், 5,500 கோடி ரூபாய்க்கு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்துக்கு ஜப்பான் இன்டர்நேஷனல் கோ-ஆபரேடிவ் ஏஜன்சி - ஜெஸ்கா, 4,500 கோடி ரூபாய் கடனுதவி வழங்குகிறது. மீதமுள்ள, 1,000 கோடி ரூபாய்க்கு, பெங்களூரு குடிநீர் வாரியத்துக்கு மாநில அரசு உத்தரவாதம் அளிக்கும். இத்திட்டத்தால் பெங்களூருக்கு, 10 டி.எம்.சி., காவிரி தண்ணீர் கிடைக்கும்.பி.பி.எம்.பி., எல்லையில் புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு, காவிரி குடிநீர் போன்ற வசதிகளை செய்து தருவது தொடர்பாக திட்டம் வகுத்து, மத்திய அரசுக்கு

அனுப்பப்பட்டுள்ளது.சமீபத்தில், பெங்களூரு நகரின், எம்.எல்.ஏ.,க்கள், அமைச்சர்கள், மத்திய நகர அபிவிருத்தி துறை அமைச்சர் வெங்கையா நாயுடுவை சந்தித்து இதுகுறித்து வலியுறுத்தினர். இத்திட்டம் விரைவில் செயல்படும் சாத்தியமுள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

## தேங்காய் விலை சரிவை தடுக்கவிவசாயிகளுக்கு மாற்று யோசனை

ராமநாதபுரம்,:தேங்காய் விலை சரிவை தடுக்க தென்னை விவசாயிகளுக்கு, ராமநாதபுரம் வேளாண் அறிவியல் நிலையம் மாற்று யோசனை தெரிவித்துள்ளது.ராமநாதபுரம் மாவட்டத்தில் 18 ஆயிரம் ஏக்கரில் தென்னை மரங்கள் உள்ளன. இங்கு விளையும் காய்கள் தமிழகத்தின் பிற மாவட்டங்கள் மட்டுமின்றி டில்லி, மும்பை போன்ற வெளி மாநில நகரங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. கர்நாடகா, கேரளா பகுதிகளில் இருந்து தேங்காய் வரத்து அதிகரிக்கும்போது விலை குறைகிறது. இதனால் தென்னை விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். இதனை தடுக்க உலர் தேங்காய் துருவலாக மதிப்பு கூட்டி விற்பனை செய்ய விவசாயிகளுக்கு ராமநாதபுரம் வேளாண் அறிவியல் நிலையம் யோசனை தெரிவித்துள்ளது.அதன் திட்ட ஒருங்கிணைப்பாளர் சீகன்பால் கூறியதாவது: உலர் தேங்காய் துருவலை தயாரிக்க நன்கு முற்றிய தேங்காயை துருவி எடுக்க வேண்டும். அதனை நீராவியில் 2 நிமிடம் வேக வைக்கவும். அவற்றை உப்பு, சிட்ரிக் அமிலம் சேர்த்து தயாரித்த உப்புக்கரைசலில் 2:1 விகிதத்தில் 2 மணி நேரம் ஊற வைக்கவும். பின் உப்புக் கரைசலை வடிகட்டிவிட்டு, துருவலை மின் உலர்ப்பானில் 60 சென்டிகிரேடு வெப்பத்தில், 5 மணி நேரம் உலர வைத்தால் போதும். இந்தமுறையில் தயாரிக்கப்படும் உலர் துருவலை குழம்பு, பொரியல் உள்ளிட்ட சமையலுக்கு பயன்படுத்தலாம் என்றார். உப்பு கரைசலுக்கு பதிலாக 10 சதவீதம் சர்க்கரை கரைசலில் துாவலை ஊற வைக்க வேண்டும். இந்தமுறையில் தயாரிக்கப்படும் துருவலை இனிப்பு பலகாரங்களில் பயன்படுத்தலாம். இதனை வெளிநாட்டினர்

உணவிற்கு பயன்படுத்துகின்றனர். ஸ்டார் ஓட்டல்களில் பயன்படுத்தப்படுகிறது. இதனால் நல்ல விலை கிடைக்கிறது. இதனை எளிதில் தயாரிக்கலாம். செலவும் குறைவு, என்றார்.

## அமெரிக்கா நிறுவனம் வழங்கிய விருது என்னை மேலும் உழைக்க தூண்டியுள்ளது: பாம்பன் மீனவ பெண் உருக்கம்



ராமேஸ்வரம்:'அமெரிக்கா நிறுவனம் வழங்கியுள்ள விருது, மீனவர்களின் நலனுக்காக என்னை மேலும் உழைக்க துாண்டி உள்ளது' என பாம்பன் மீனவ பெண் லட்சுமி தெரிவித்தார்.ராமேஸ்வரம் அருகே பாம்பன் சின்னபாலத்தைச் சேர்ந்த மீனவ பெண் லட்சுமி,48. இவர் மீனவ பெண்களை ஒருங்கிணைந்து கடலில் பாரம்பரிய முறைப்படி மீன்பிடிப்பது, பாசி எடுப்பது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி, மீனவ பெண்கள் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவினார். இவரது சேவையை பாராட்டி, அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள கடல் வளம், சுற்றுசூழல் பாதுகாக்கும் 'சீகாலஜி' எனும் தொண்டு நிறுவனம், பாம்பன் லட்சுமியை சிறந்த 'மீனவ பெண்மணி' ஆக தேர்வு செய்து, பரிசு பெற அழைப்பு விடுத்தது.அக். 5 தேதி, சென்னையில் இருந்து அமெரிக்காவுக்கு புறப்பட்ட லட்சுமி, அக். 8ல் கலிபோர்னியா மாகாணம் பெர்க்லின் நகரில் நடந்த விழாவில், சீகாலஜி நிறுவனம் லட்சுமிக்கு

விருது மற்றும் 10 ஆயிரம் டாலர் (ரூ.6 லட்சம்) பரிசு தொகைக்கான காசோலை வழங்கியது.விருதுடன் நேற்று பாம்பன் ரயில்வே ஸ்டேஷன் வந்த லட்சுமிக்கு, ஊராட்சி தலைவர் பேட்ரிக், ஜமாத் நிர்வாகிகள், மீனவ பெண்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.**லட்சுமி கூறியதாவது:**கலிபோர்னியா, பெர்க்லின் நகரில் நடந்த விழாவில், உலக அளவில் பலதுறையில் சாதித்த நுாறுக்கும் மேலான ஆண்கள், பெண்களுக்கு பரிசு வழங்கி கவுரவித்தனர். இந்த விருது மீனவ பெண்கள் வாழ்க்கை தரம், குழந்தைகள் கல்வி, கடல் வளம் பாதுகாப்புக்கு என்னை மேலும் உழைக்க துாண்டியுள்ளது. இது தமிழக மீனவ பெண்களுக்கு கிடைத்த விருது. கல்வி அறிவு இல்லாத மீனவ கிராமத்தை மத்திய, மாநில அரசுகள் தத்தெடுத்து மீனவ குழந்தைக்கு கட்டாய கல்வியை புகுத்தினால், சமூகத்தில் உயர் பதவிக்கு வருவார்கள். இதுகுறித்து மத்திய, மாநில அரசை தொடர்ந்து வலியுறுத்துவோம் என்றார்.

### மேட்டூர் அணையின் நீர்வரத்து அதிகரிப்பு

மேட்டூர் : காவிரி நீர்பிடிப்பு பகுதியில் பெய்து வரும் கனமழை காரணமாக, மேட்டூர் அணையின் நீர்வரத்து, 8,456 கனஅடியிலிருந்து 9,796 கனஅடியாக அதிகரித்தது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் 68.67 அடியாகவும், நீர் இருப்பு 31.57 டி.எம்.சி.,யாகவும் உள்ளது. மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக வினாடிக்கு 8 ஆயிரம் கனஅடி நீரும், அணையிலிருந்து கிழக்கு மற்றும் மேற்கு கால்வாய் பாசனத்திற்காக 500 கனஅடி நீரும் திறக்கப்படுகிறது.

### மழையால் மண்ணில் புதைந்த மக்காச்சோளம்பழநியில் 500 ஏக்கர் பாதிப்பு



பழநி,:பழநி அருகே சத்திரப்பட்டி சுற்றுப்பகுதியில் கனமழையால் காட்டாற்று வெள்ளத்தில் 500 ஏக்கர் பரப்பளவிலான மக்காச்சோள விவசாயம் பாதிப்படைந்துள்ளது.கடந்த சில நாட்களாக தொடர் மழை காரணமாக பழநி அருகே சத்திரப்பட்டி, சிந்தலவாடம்பட்டி, வேலுார், 16புதுார், போடுவார்பட்டி பகுதிகளில் பல ஏக்கர் பரப்பளவில் பருத்தி, மக்காச்சோளம்

விதைத்துள்ளனர்.அக்.,11 இரவு முழுவதும் கனமழைபெய்தது. இதனால் காட்டாற்று ெவள்ளம் ஏற்பட்டு, சுமார் 500 ஏக்கர் பரப்பளவிலான மக்காச்சோளப்பயிர்களை சேதப்படுத்தியது. வயல் முழுவதும் தண்ணீர் தேங்கிநின்று மண்மேவியுள்ளது. உழுது விதைத்த தடம் தெரியாமல் வயல்கள் உருமாறியுள்ளன.ஒவ்வொரு விவசாயிக்கும் தலா ரூ.30 ஆயிரம் முதல் ரூ.1 லட்சம் வரை இழப்பு ஏற்பட்டுள்ளது. மீண்டும் வயலை தயார் செய்து விவசாயப்பணியை துவங்க முடியாமல் சிறுவிவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.காட்டாற்று வெள்ளத்தால் சத்திரப்பட்டி, 16புதுார் வழியாக போடுவார்பட்டிக்கு செல்லும் தரைப்பாலம் சேதமடைந்துள்ளது. மழைநீர் செல்லும் ஓடையில் முட்செடி, கொடிகளால் மூடியுள்ளது. ரோடுகள் சேதமடைந்துள்ளன.

விவசாயிகள் சிந்தலவாடம்பட்டி ஞானசேகரன், 16புதுார் ராமர், வேலுச்சாமி, போடுவார்பட்டி ஆறுமுகம் கூறுகையில்,'மூன்று நாட்களுக்கு முன் பெய்த கனமழையால் நல்லதங்காள் வாய்க்கால், ரெட்டியப்பட்டி ஓடையில் காட்டாற்றுவெள்ளமாக ஓடியதில் கரைகள் சேதமடைந்தன. வயலில் மழைநீர் புகுந்து மக்காச்சோளப் பயிர்களை அடித்துச் சென்றுவிட்டன. இன்னமும் வயல்கள், தென்னந்தோப்புகளில் தண்ணீர் சூழ்ந்து நிற்கிறது. ஏற்கனவே வயலை உழுது தயார் செய்து விதைக்க ஏக்கருக்கு ரூ.6 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வரை செலவு செய்துள்ளோம். வயலில் மேவியுள்ள மண்ணை அப்புறப்படுத்தி சாகுபடி செய்ய நிறைய செலவாகும்,' என்றனர்.

## தேங்காய் விலை சரிவை தடுக்கவிவசாயிகளுக்கு மாற்று யோசனை

ராமநாதபுரம்,:தேங்காய் விலை சரிவை தடுக்க தென்னை விவசாயிகளுக்கு, ராமநாதபுரம் வேளாண் அறிவியல் நிலையம் மாற்று யோசனை தெரிவித்துள்ளது.

ராமநாதபுரம் மாவட்டத்தில் 18 ஆயிரம் ஏக்கரில் தென்னை மரங்கள் உள்ளன. இங்கு விளையும் காய்கள் தமிழகத்தின் பிற மாவட்டங்கள் மட்டுமின்றி டில்லி, மும்பை போன்ற வெளி மாநில நகரங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. கர்நாடகா, கேரளா பகுதிகளில் இருந்து தேங்காய் வரத்து அதிகரிக்கும்போது விலை குறைகிறது. இதனால் தென்னை விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். இதனை தடுக்க உலர் தேங்காய் துருவலாக மதிப்பு கூட்டி விற்பனை செய்ய விவசாயிகளுக்கு ராமநாதபுரம் வேளாண் அறிவியல் நிலையம் யோசனை தெரிவித்துள்ளது.அதன் திட்ட ஒருங்கிணைப்பாளர் சீகன்பால் கூறியதாவது: உலர் தேங்காய் துருவலை தயாரிக்க நன்கு முற்றிய தேங்காயை துருவி எடுக்க வேண்டும். அதனை நீராவியில் 2 நிமிடம் வேக வைக்கவும். அவற்றை உப்பு, சிட்ரிக் அமிலம் சேர்த்து தயாரித்த உப்புக்கரைசலில் 2:1 விகிதத்தில் 2 மணி நேரம் ஊற வைக்கவும். பின் உப்புக் கரைசலை வடிகட்டிவிட்டு, துருவலை மின் உலர்ப்பானில் 60 சென்டிகிரேடு வெப்பத்தில், 5 மணி நேரம் உலர வைத்தால் போதும். இந்தமுறையில் தயாரிக்கப்படும் உலர் துருவலை குழம்பு, பொரியல் உள்ளிட்ட சமையலுக்கு பயன்படுத்தலாம் என்றார்.

உப்பு கரைசலுக்கு பதிலாக 10 சதவீதம் சர்க்கரை கரைசலில் துாவலை ஊற வைக்க வேண்டும். இந்தமுறையில் தயாரிக்கப்படும் துருவலை இனிப்பு பலகாரங்களில் பயன்படுத்தலாம். இதனை வெளிநாட்டினர் உணவிற்கு பயன்படுத்துகின்றனர். ஸ்டார் ஓட்டல்களில்

பயன்படுத்தப்படுகிறது. இதனால் நல்ல விலை கிடைக்கிறது. இதனை எளிதில் தயாரிக்கலாம். செலவும் குறைவு, என்றார்.

## படாளம் ஆலைக்கு கரும்பு வழங்க உத்திரமேரூர் விவசாயிகள் ஆர்வம்

காஞ்சிபுரம்:படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலையுடன் தங்களை இணைத்தால் மட்டுமே, தங்களது வாழ்வாதாரம் உயரும் என, கருத்துக்கேட்பு கூட்டத்தில், உத்திரமேரூர் விவசாயிகள் கருத்து தெரிவித்தனர்.மதுராந்தகம் அடுத்த படாளம் பகுதியில், தமிழ்நாடு சர்க்கரை துறையின் கீழ், கூட்டுறவு சர்க்கரை ஆலை இயங்கி வருகிறது.இந்த ஆலைக்கு கரும்புகளை வழங்கி வந்த, உத்திரமேரூர் விவசாயிகளை, 1995 - 96ம் ஆண்டில், பழையசீவரம் எஸ்.வி., சர்க்கரை ஆலைக்கு கரும்பு வழங்க அரசு உத்தரவிட்டது. அதன்படி, உத்திரமேரூர் கரும்பு விவசாயிகள், எஸ்.வி., சர்க்கரை ஆலைக்கு கரும்பு வழங்கி வந்தனர்.கடந்த, 2010ம் ஆண்டிலிருந்து இயங்கும் படாளம் சர்க்கரை ஆலை, போதிய உற்பத்தி இல்லாமல் இயங்குவ தாக, காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்ட கரும்பு விவசாயிகள் சங்கம் மற்றும் ராமச்சந்திரபாபு ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் கடந்த ஆண்டு வழக்கு தொடர்ந்தனர். இதை தொடர்ந்து, உத்திரமேரூர் தாலுகாவிற்கு உட்பட்ட விவசாயிகளிடம் கருத்துக்கேட்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.அதன்படி, காஞ்சிபுரம், அன்னை அஞ்சுகத்தில், நேற்று காலை, 9:30 மணிக்கு, கருத்துக்கேட்பு கூட்டம் சர்க்கரை துறை ஆணையர் மகேஷ் காசிராஜன் தலைமையில் நடந்தது. இந்த கூட்டத்தில் பேசிய உத்திரமேரூர் விவசாயிகள், 'படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலையுடன் தங்களை இணைத்தால் மட்டுமே, தங்களது வாழ்வாதாரம் உயரும்' என, கருத்து தெரிவித்து, தங்களது கரும்புகளை, படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு வழங்க ஆதரவு தெரிவித்தனர்.

## 'இயற்கை வளங்களை பாதுகாக்க கிராமவாசிகள் முன்வர வேண்டும்'

திருத்தணி:அழிந்து வரும் இயற்கை வளங்களை பாதுகாக்க கிராமவாசிகள் முன்வர வேண்டும் என, ஊராட்சியில் நடந்த மக்கள் தொடர்பு திட்ட முகாமில், ஆட்சியர் அறிவுறுத்தினார்.

திருத்தணி ஒன்றியம் டி.சி., கண்டிகை ஊராட்சியில், மக்கள் தொடர்பு திட்ட முகாம், வருவாய் கோட்டாட்சியர் சேதுமாதவன் தலைமையில்,நடந்தது. மாவட்ட ஆட்சியர் வீரராகவ ராவ் முகாமை துவக்கி வைத்து பேசுகையில், "ஊராட்சியை சுத்தமாக வைத்துக் கொள்ளவும் அழிந்து வரும் இயற்கை வளங்களை பாதுகாக்கவும் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கிராமவாசிகள் முன்வர வேண்டும்," என்றார்.முகாமில், 186 பயனாளிகளுக்கு, 2,28,750 ரூபாய்க்கான காசோலைகள் வழங்கப்பட்டன. மேலும், கிராமவாசிகளிடமிருந்து, மொத்தம், 102 மனுக்கள் பெறப்பட்டன.

## திண்டிவனம் விவசாயிகளுக்கு இலவச கத்திரி நாற்று வழங்கல்

திண்டிவனம்: அரிமா சங்கத்தின் சார்பில் விவசாயிகளுக்கு இலவச கத்திரி நாற்று வழங்கப்பட்டது.

திண்டிவனம் அரிமா சங்கத்தின் சார்பில் மாடித் தோட்டம், உலக உணவு நாள் மற்றும் பார்த்தீனியம் விழிப்புணர்வு ஆகிய முப்பெரும் விழா நடந்தது. திண்டிவனம் லட்சுமி சந்தர் ஹாலில் நடந்த விழாவிற்கு சங்க தலைவர் தினேஷ் தலைமை தாங்கினார். அரிமா சங்க மாவட்ட தலைவர் சங்கரன் முன்னிலை வகித்தார். அரிமா சங்க செயலாளர் கமலக்கண்ணன் வரவேற்றார். விழுப்புரம் வேளாண் இணை இயக்குனர் ரத்தினசபாபதி பங்கேற்று, விவசாயிகளுக்கு கத்திரி நாற்று வழங்கினார். வேளாண் உதவி இயக்குனர்கள் கென்னடி ஜெபக் குமார், ராமசாமி, சுகுமார்,

வெங்கடேசன், எத்திராஜ் ஆகியோர் சிறப்புரையாற்றினர். பொருளாளர் சீனுவாசன் நன்றி கூறினார்.

## விவசாயிகளுக்கு வேளாண் பயிற்சி

கள்ளக்குறிச்சி: தமிழ்நாடு வேளாண்மை துறை மற்றும் இந்தியன் பொட்டாஷ் நிறுவனம் சார்பில் விவசாயிகளுக்கான வேளாண் பயிற்சி முகாம் நடந்தது.

கள்ளக்குறிச்சி கே.சி.எஸ்., திருமண மண்டபத்தில் நடந்த முகாமிற்கு, விழுப்புரம் வேளாண்மை துணை இயக்குனர் ரத்தினசபாபதி தலைமை தாங்கினார். சென்னை இந்தியன் பொட்டாஷ் நிறுவன துணை மேலாளர் பார்வதிராஜா வரவேற்றார். வேளாண்மை இணை இயக்குனர்கள் ரவி, ராமலிங்கம், ராமசாமி, தர்மலிங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். சென்னை இந்தியன் பொட்டாஷ் நிறுவன முதுநிலை மண்டல மேலாளர் லோகமூர்த்தி பயிற்சி அளித்தார்.

இதில் வேளாண்மை அலுவலர்கள் பொன்னுராசன், கோபால் மற்றும் கள்ளக்குறிச்சி பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் பலரும் பங்கேற்றனர். உதவி மேலாளர் ஹரிபாபு நன்றி கூறினார்.

## பருத்தி ஏலம்

அவிநாசி: அவிநாசி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று நடந்த பருத்தி ஏலத்துக்கு, 331 மூட்டை வரத்தாக இருந்தது.

ஆர்.சி.எச்., ரகம் குவிண்டாலுக்கு, 4,100 முதல், 4,670 ரூபாய் வரையும், மட்ட ரகம், 1,400 முதல், 2,000 வரை ஏலம் போனது. 88 விவசாயிகள், ஆறு வியாபாரிகள் பங்கேற்றனர். மொத்தம், 4.45 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடைபெற்றது.

## மலர் சாகுபடி: தெளிவான ஆய்வு அவசியம்

ஊட்டி: 'மலர் சாகுபடி தொழிலை குறித்து, தெளிவான ஆய்வறிக்கை வெளியிட வேண்டும்' என, வலியுறுத்தப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில், 500 சிறு விவசாயிகள் மலர் சாகுபடி தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த தொழிலை மேம்படுத்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, 1.40 கோடி ரூபாய் செலவில் தும்மனட்டி தோட்டக்கலை பண்ணையில் கார்னேஷன் நாற்று உற்பத்தி மையம் அமைக்கும் திட்டம் துவக்கப்பட்டது. எனினும், அதனால் விவசாயிகளுக்கு பயன் ஏதும் ஏற்படவில்லை.

இந்நிலையில், மாவட்ட நிர்வாகம் சார்பில் சமீபத்தில் வெளியிட்ட ஆய்வறிக்கையில்,'இந்த தொழில் லாபகரமாக இயங்கி வருகிறது' என, தெரிவிக்கப்பட்டது. இதற்கு மாவட்ட மலர் சாகுபடி சங்கம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.நீலகிரி மலர் சாகுபடி விவசாயிகள் சங்க தலைவர் விஸ்வநாதன், கலெக்டரிம் அளித்த மனு: மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட ஆய்வறிக்கையில், 2004ல், மலர் சாகுபடியால் நஷ்டமடைந்த சிறுவிவசாயிகளின் எண்ணிக்கை குறித்து தெரிவிக்கவில்லை. மலர் சாகுபடி தொழிலை தொடர முடியாததால் பல விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த நான்கு ஆண்டுகளில், 22 ஏக்கரில் கூடுதலாக அமைந்துள்ள குடில்கள், நலிவடைந்த சிறுவிவசாயிகளிடம், மிக மலிவு விலையில் வாங்கி நிறுவப்பட்டு, அரசின் மானியம் பெற்றவை. மலர் சாகுபடி தொழிலில் ஈடுபட்டவர்களில் சிறுவிவசாயிகள் எத்தனை பேர்; பெரிய விவசாயிகள் மற்றும் கார்பரேட் கம்பெனிகள் எத்தனை என்பது குறித்து தெரிவிக்க வேண்டும்.மலர் சாகுபடி தொழிலில் இன்றைய நிலையை முழுமையாக ஆய்வு செய்யாமல் அறிக்கை வெளியிட்டது, விவசாயிகளை வருத்தம் அடைய செய்துள்ளது. எனவே, மலர் சாகுபடி குறித்து,

தெளிவாக ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு, விஸ்வநாதன் கூறியுள் ளார்.

**ஒட்டன்சத்திரத்தில் நெல்லி விலை குறைவு**

ஒட்டன்சத்திரம் : ஊட்டியிலிருந்து நேரிடையாக கேரளாவிற்கு நெல்லிக்காய் கொண்டு செல்லப்படுவதால், ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் விலை கிலோவிற்கு ரூ.10 குறைந்தது.அம்பிளிக்கை மற்றும் சுற்றி உள்ள கிராமப்பகுதிகள், வத்தலக்குண்டு பகுதியில் விளைந்த நெல்லிக்காய் ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. இவை கேரள வியாபாரிகளால் வாங்கப்படுகிறது. கடந்த சில நாட்களாக ஊட்டியில் நெல்லிக்காய் அறுவடை செய்யப்பட்டு வருகிறது. இவை அங்கிருந்து அப்படியே கேரளாவில் உள்ள பல நகரங்களுக்கு லாரிகள் மூலம் கொண்டு செல்லப்படுகிறது. இதன் காரணமாக கேரள வியாபாரிகள் ஒட்டன்சத்திரத்தில் வாங்கும் அளவினை குறைத்தனர். இதனையொட்டி நெல்லிக்காய் விலை குறைந்தது. கடந்த சில நாட்களாக கிலோ ரூ.40க்கு விற்ற நெல்லிக்காய் நேற்று ரூ.10 குறைந்து ரூ.30க்கு விற்றது. கமிஷன்கடை உரிமையாளர் ராசியப்பன் கூறுகையில், "" ஊட்டியிலிருந்து நேரிடையாக கேரளாவிற்கு நெல்லிக்கனி கொண்டு செல்லப்படுவதால், இங்கு விலை குறைந்துள்ளது. விரைவில் மறுபடியும் விலை உயரும்," என்றார்.

**மானிய விலையில் விதைகள் விற்பனை**

ஆண்டிபட்டி:ஆண்டிபட்டி உதவி இயக்குனர் பெரியசாமி கூறியதாவது: ஆண்டிபட்டி விவசாய விரிவாக்க மையத்தில் ஏ.டி.டீ.(ஆர்) 45 ரக சான்று விதை கிலோவுக்கு ரூ.10 வீதம் 50, கிலோ கொண்ட மூடைக்கு ரூ.500 மானியமாக வழங்கப்படுகிறது.

தேசிய உணவு பாதுகாப்புத்திட்டத்தில் வம்பன் 4 (சி) ரக உளுந்து விதை, கிலோவுக்கு ரூ.25 வீதம், 20 கிலோ கொண்ட மூடைக்கு ரூ. 500 மானியத்தில் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு பருத்தி சாகுபடி குழுமம் திட்டத்தில் எம்.சி.யு.5 ஆதார விதை கிலோவுக்கு ரூ.25 வீதம் மானியம் வழங்கப் படுகிறது. தேவைப்படும் விவசாயிகள் அவற்றை வாங்கி பயனடையலாம்.இவ்வாறு தெரிவித்துள்ளார்.

**மூலிகை பூச்சிவிரட்டி தயாரித்த விவசாய கல்லூரி மாணவிகள்**

கம்பம்:விவசாயத்தில் பூச்சிகளை விரட்டும் மூலிகை பூச்சி விரட்டி ஒன்றை எப்படிதயாரிப்பது என்று விவசாயிகளுக்கு மதுரை விவசாய கல்லூரி மாணவிகள் செய்து காண்பித்தனர்.

மதுரை விவசாய கல்லூரி மாணவிகள் தீபிகா, கவிப்பிரியா, மகுடீஸ்வரி, ரம்யா, சாருமதி, கவிதா ஆகியோர் கம்பத்தில் உள்ள அசோகன் என்பவரது தோட்டத்தில் விவசாயிகளுக்கு மூலிகை பூச்சி விரட்டி எப்படி தயாரிப்பது என்று செயல்விளக்கம் செய்து காண்பித்தனர்.

வேம்பு, ஊமத்தை, எருக்கு, புங்கன், பீநாரி ஆகியவற்றின் இலைகளை தலா 5 கிலோ வீதம் சேகரித்து, அவற்றை சிறு துண்டுகளாக வெட்டி, 10 லிட்டர் கோமியத்தில் 3 நாட்கள் தண்ணீர் ஊற்றி ஊற வைக்க வேண்டும். காற்றோட்டமான இடத்தில் நன்றாக கலக்கி நிழலில் மூடி வைக்க வேண்டும். மூன்று நாட்களுக்கு பிறகு நன்று கலக்கி வடிகட்ட வேண்டும். இதில் ஒரு லிட்டர் எடுத்து 10 லிட்டர் தண்ணீரில் கலந்து செடிகளின் மீது தெளிக்க வேண்டும். வாரம் ஒருமுறை இதை செய்யலாம்.

இலைகள் நொதித்து அதில் இருந்து கிளம்பும் வேதிப்பொருள் மூலம் பூச்சிகள் விரட்டப்படும். அனைத்து பயிர்களுக்கும் பயன்படுத்தலாம். முதலீடு தேவையில்லை. மண்ணில் நச்சுத்தன்மை தங்குவதில்லை. இதன்மூலம் இயற்கையாக பூச்சிகளை விரட்டலாம், என கூறினர்.

## வன உயிரினங்களின் பாதுகாப்பில் தீவிர கவனம் செலுத்த வேண்டும்

கம்பம்:""வன உயிரினங்களின் பாதுகாப்பில் வனத்துறை பணியாளர்கள் கவனம் செலுத்த வேண்டும்," என்று மதுரை மண்டல வனப்பாதுகாவலர் முகமது இக்ரம்ஷா கூறியுள்ளார்.

தேனி வனக்கோட்டம் இரண்டாக பிரிக்கப்பட்டு, மேகமலை வனஉயிரின சரணாலயமாக மாறிய பின், தற்போது உள்ள நிலைகள் குறித்து ஆய்வு செய்வதற்காக மதுரை மண்டல வனப் பாது காவலர் முகமது இக்ரம்ஷா கம்பம் வனத்துறை அலுவலகம் வந்தார். அவருடன் மேகமலை வார்டன் சொர்ணப்பன், உதவி வனப்பாதுகாவலர் நாகையா வந்தனர். தொடர்ந்து சுருளி அருவி, வண்ணாத்திபாறை பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டார்.

சரணாலயமாக மாறிய பின், எண்ணிக்கையில் அதிகரித்திருக்கும் உயிரினம் எது, புலிகள் மற்றும் சிறுத்தை, யானைகள், சிங்கவால் குரங்குகள், வரையாடுகள் போன்றவற்றின் நடமாட்டம் பற்றிய விபரங்களை அதிகாரிகளிடம் கேட்டார்.

பின்னர் வனப்பணியாளர்களிடம் பேசிய முகமது இக்ரம்ஷா, ""மேகமலை வனஉயிரின சரணாயலத்தில் வனஉயிரினங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஒவ்வொரு சிறிய உயிரினத்தையும் நாம் பாதுகாக்க வேண்டும். குறிப்பாக, ரோடுகளுக்கு வரும்போது அவற்றை பாதுகாத்து மீண்டும் வனப்பகுதிக்குள் விட வேண்டும். சுருளியை இன்னமும் சுத்தப்படுத்தி பார்வையாளர்களையும், சுற்றுலா பயணிகளையும் கவரும் வகையில் பராமரிக்க வேண்டும்," என்றார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## சம்பாவில் இலைச் சுருட்டுப் புழு தாக்குதலை கட்டுப்படுத்தலாம்



தற்போது சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா நெல் பயிர்களை இலைச் சுருட்டுப்புழுத் தாக்குதலில் இருந்து காப்பாற்ற பின் வரும் தொழில்நுட்பங்களை விவசாயிகள் பயன்படுத்த வேண்டுமென வேளாண்துறை யோசனை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து புதுக்கோட்டை வேளாண் இணை இயக்குநர் த. சந்திரசேகரன் கூறியதாவது: தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா நெல் பயிர்களை இலைச் சுருட்டுப் புழுத் தாக்குதலில் இருந்து காப்பாற்றும் வகையில் விவசாயிகள் உடனடியாக பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு மகசூல் இழப்பைத் தவிர்த்திடலாம். குறைந்த மழையும், காற்றில் ஈரப்பதம் மிகுதியாகவும், தற்போது நிலவும் வானிலை காரணமாக சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா நெற்பயிரில் அனைத்து வட்டாரங்களிலும் இலைச் சுருட்டுப் புழுக்களின் தாக்குதல் பரவலாக காணப்படுகிறது.

இலைச் சுருட்டுப் புழுவின் தாக்குதல் அறிகுறிகள்:

முட்டைகளில் இருந்து வெளிவரும் புழுக்கள் இலைகளை நீளவாக்கில் மடித்துச் சேதப்படுத்துகின்றன. சுருட்டப்பட்ட இலைச் சுருள்களுக்குள் புழுக்கள் இருந்து கொண்டு பச்சையத்தைச் சுரண்டி உண்பதால்

இலைகளில் வெப்ᎄளை வெப்ᎄளையாகக் காணப்படும். இப்புழுவினால் தாக்கப்பட்ட இலைகள் வெளிறிக் காணப்படுவதுடன் பயிரில் ஒளிச்சேர்க்கை குறைந்து வளர்ச்சி குன்றிவிடுகிறது. புரட்டாசி முதல் மார்கழி மாதம் வரை இப்பூச்சியின் தாக்குதல் அதிகமாக இருக்கும். இப்பூச்சித் தாக்குதலை வயல்களில் அந்துப் பூச்சிகள் பறப்பதில் இருந்து தெரிந்து கொள்ளலாம். விளக்குப் பொறியால் பெருமளவில் தாய் அந்துப் பூச்சிகள் கவரப்படும்.

கட்டுப்படுத்தும் முறைகள்: பரிந்துரைக்கப்பட்ட அளவு மட்டுமே உரமிட வேண்டும். தேவைக்கேற்ப மட்டும் தழைச்சத்து இட்டும், இப்பூச்சி அதிகமாகத் தோன்றும் இடங்களில் ரசாயன உரங்களைத் தவிர்த்தும் சேதத்தைக் குறைக்கலாம். தழைச்சத்தைப் பிரித்து மூன்று அல்லது நான்கு முறையாக இட வேண்டும். டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் என்ற முட்டை ஒட்டுண்ணியை ஏக்கருக்கு 2 சிசி எனும் அளவில் நடவு செய்த 37, 44 மற்றும் 51-வது நாள்களில் வயல்களில் விட வேண்டும்.

இலைச் சுருட்டுப் புழுவின் அந்துப் பூச்சிகள் இரவு நேரத்தில் விளக்குப்பொறியின் வெளிச்சத்தால் ஈர்க்கப்படுகின்றன.

எனவே, முன்னிரவு நேரங்களில் விளக்குப் பொறிகளால் கவரப்படும் பூச்சிகளின் எண்ணிக்கையைக் கணித்து, தேவைப்பட்டால் பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்தலாம். பொருளாதாரச் சேதநிலையானது பயிர் வளர்ச்சிக் காலத்தில் 10% இலைச் சேதத்தையும், பூக்கும் தருணத்தில் கண்ணாடி இலைகளில் 5% சேதத்தையும் தாண்டும்போது ஏக்கருக்கு 400 மி.லி. டிரை அசோபாஸ் அல்லது 10 கிலோ கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 4% குருணை அல்லது 500 மில்லி பிப்ரோனில் 5% எஸ்.சி. அல்லது 40 கிராம் தயோ மெத்தோசம் 25% நனையும் குருணை அல்லது 20 மி.லி. புளுபென்டையமைடு 480 எஸ்.சி. போன்ற பூச்சி மருந்துகளைத் தெளித்துச் சிறந்த முறையில் கட்டுப்படுத்தி பயிர்களின் இழப்பைத் தடுக்கலாம்.

**மண்ணின் வளத்தை அதிகரிக்கும் பசுந்தாள் உரம்**



இந்திய வேளாண்மையில் நவீன சாகுபடித் தொழில்நுட்பத்தின் மூலமும், உயர் விளைச்சல் ரகங்கள் மூலமும் உணவு உற்பத்தியை பன்மடங்கு அதிகரித்ததால், தன்னிறைவு பெற்றுள்ளோம். இருப்பினும், பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்பவும், விளைநிலங்கள் கட்டடங்களாக மாறி வருவதாலும், மண்ணின் பேரூட்டங்கள், நுண்ணூட்டங்களில் குறைபாடு ஏற்படுவதாலும், அங்கக உரங்களைப் பயன்படுத்தாமை அல்லது குறைத்து இடுவதாலும், பசுந்தாள் உரமிடுதல் காலத்தின் கட்டாயம் என்ற சூழ்நிலை உருவாகிவிட்டது. இது குறித்து, வைகை அணை வேளாண்மை ஆராய்ச்சி நிலைய உதவிப் பேராசிரியர் முனைவர் ம. மதன்மோகன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: மண்ணின் வளத்தைப் பாதுகாக்க, அதிக கரிம அளவை மண்ணில் நிலை நிறுத்துதல் மிக அவசியம். தொடர்ந்து தழை, எருக்களை நிலத்தில் இடுவதால், மண்ணில் கரிமம் நிலைபெறும். மண்ணில் சேரும் கரிமப் பொருள்களால் மண் புழுக்களின் வளர்ச்சியும், தழைச் சத்தை நிலைப்படுத்தும் பாக்டீரியாக்களின் வளர்ச்சியும் அதிகரிக்கின்றன. மேலும், மண் இயல்பு அடர்த்தி குறைகிறது. அதனால், உழுவது முதல் விதை முளைப்பு, பயிர் வளர்ச்சி, நீர்ப்பிடிப்பு ஆகியன எளிதாகின்றன.

பசுந்தாள் உரப் பயிர்கள் வளிமண்டலத்தில் உள்ள தழைச்சத்தை கிரகித்து, வேர்ப் பகுதியில் சிறுமுடிச்சுகள் மூலம் நிலைநிறுத்தி, அந்தப் பயிரின் தழைசத்து, உரத்தேவையினை தானே பார்த்துக் கொள்கிறது. இதனால், செடியின் வளர்ச்சி அதிக பசுமையாக இருக்கிறது. மேலும், மண் வளமும் பெருகிறது. பசுந்தாள் பயிர்களை அப்படியே மடக்கி, நிலத்தின் உழும் முறையை தொன்றுதொட்டு நாம் தெரிந்த முறையாகும்.

பசுந்தாள் உரப் பயிர்களான சணப்பு, தக்கைப் பூண்டு, மணிலா அகத்தி, கொழுஞ்சி மற்றும் சித்தகத்தியில் தழை, மணி, சாம்பல் சத்துடன் நூண்ணூட்ட சத்துக்களும் உள்ளன. பசுந்தாள்களை மண்ணில் இட்ட பின் பயிரிடப்படும் பயிர்களின் விளைச்சல் வெகுவாக அதிகரிக்கின்றது. மேலும், அடுத்து விளைவிக்கும் பயிர்களுக்கான ரசாயன உரத் தேவையும் குறைகிறது. பசுந்தாள் பயிர்களை நிலங்களில் விதைத்த 30-45 நாள்களுக்குள் நிலத்தில் மடக்கி உழுதுவிடவேண்டும். அதாவது, பசுந்தாள் பயிர்களின் பூக்கும் பருவத்துக்கு முன்பாக இதனை மடக்கி உழ வேண்டும். நெல் வயலில் நாற்று நடுவதற்கு 20-25 நாள்களுக்கு முன்னரும், மற்ற நிலங்களில் விதைப்பதற்கு 30-35 நாள்களுக்கு முன்னரும் பசுந்தாள்களை மண்ணில் இட்டு உழுதுவிடவேண்டும். அவ்வாறு உழும் போது, தழைச்சத்தை வெகுமளவில் கொடுக்கின்றது. அவை மட்கும்போது உற்பத்தியாகும் கரிம அமிலங்களின் வினையால், மண்ணில் பயிருக்குக் கிடைக்கும் துத்தநாகச் சத்து அதிகரித்துக் காணப்படுகிறது.

பசுந்தாள் உரப் பயிர்களான சணப்பில் கோ-1, கொழிஞ்சியில் எம்டியு-1, மணிலா அகத்தியில் கோ-1 ஆகிய ரகங்கள், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியிடப்பட்டுள்ளது. பசுந்தாள் உற்பத்திக்கு ஏக்கருக்கு சணப்பு என்றால் 10 கிலோ, தக்கைப் பூண்டு என்றால் 20 கிலோ, மணிலா அகத்தி என்றால் 15 கிலோ அல்லது கொழிஞ்சிக்கு 8 கிலோ போதுமானது.சணப்பின் மூலம் ஏக்கருக்கு சுமார்

7 டன் உயிர் பொருள்களும் 35 கிலோ தழைச்சத்தும், தக்கைப் பூண்டில் 10 டன் உயிர் பொருள்களும் 60 கிலோ தழைச்சத்தும், மணிலா அகத்தியில் 10 டன் உயிர் பொருள்களும் 50 கிலோ தழைச்சத்தும் மற்றும் கொழுஞ்சியில் 3 டன் உயிர் பொருள்களும் 25 கிலோ தழைச்சத்தும் பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. பசுந்தாள் உரமிடுவதால் அங்ககப் பொருள்கள் மண்ணில் சேர்கின்றன. இதனால், மண்ணின் வளம் மேம்படுகிறது. நிலத்தில் நீர் தேக்கும் தன்மை அதிகரிக்கின்றது. அடுத்ததாகப் பயிரிடப்படும் பயிர்களின் நுண்ணூட்டத் தேவை நிவர்த்தி செய்யப்படுகிறது. ஆக மொத்தத்தில், 15 முதல் 20 சதவீத பயிர் விளைச்சல் அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே, பசுந்தாள் உரங்களைத் தொடர்ந்து பயன்படுத்தி, விளைநிலம் மற்றும் சுற்றுச்சூழலை மாசுபடுவதிலிருந்து பாதுகாத்து, அடுத்த தலைமுறையினருக்கு சிறந்ததோர் உலகத்தை கொடுப்பது நமது கடமையாகும் என்றார்.

## **கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கே கரும்பு: ஒட்டு மொத்த விவசாயிகள் உறுதி**



விவசாயிகளின் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் பங்கேற்ற சர்க்கரைத் துறை ஆணையர் மகேசன் காசிர

கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள்.

படாளம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கே கரும்பு வழங்குவது என்று காஞ்சிபுரத்தில் புதன்கிழமை நடந்த கருத்துக் கேட்புக் கூட்டத்தில் உத்தரமேரூர் பகுதியைச் சேர்ந்த ஒட்டுமொத்த விவசாயிகளும் கருத்து தெரிவித்தனர்.

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் அடுத்த படாளம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை காமராஜர் ஆட்சி காலத்தில் செயல்படத் தொடங்கியது. பல்வேறு நிர்வாக குளறுபடி காரணமாக இந்த ஆலை கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு இழுத்து மூடப்பட்டது. இதைத் தொடர்ந்து வாலாஜாபாத் அருகே செயல்படும் தனியார் சர்க்கரை ஆலைக்கு விவசாயிகள் கரும்பை வழங்கினர். இந்த நிலையில், கடந்த 2011-ஆம் ஆண்டு முதல் படாளம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை மீண்டும் செயல்பாட்டுக்கு வந்தது.இதைத் தொடர்ந்து மதுராந்தகம், செய்யூர், திருப்போரூர் பகுதி விவசாயிகள் படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கும், உத்தரமேரூர், சீத்தனஞ்சேரி, வாலாஜாபாத், காஞ்சிபுரம் உள்ளிட்ட பகுதி விவசாயிகள் தனியார் சர்க்கரை ஆலைக்கும் கரும்பு விநியோகம் செய்ய வேண்டும் என்று சர்க்கரை துறை ஆணையம் அறிவித்தது.

இதற்கு உத்தரமேரூர் பகுதி விவசாயிகளிடையே எதிர்ப்புக் கிளம்பியது. உத்தரமேரூர் பகுதி விவசாயிகள் படாளம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்குத்தான் தாங்கள் விளைவித்த கரும்புகளை வழங்குவோம் என்று சர்க்கரைத் துறை ஆணையருக்கு மனு அளித்தனர். இதையடுத்து கரும்பு விவசாயிகள் கருத்துக் கேட்புக் கூட்டம் காஞ்சிபுரத்தில் புதன்கிழமை நடந்தது. சர்க்கரைத் துறை ஆணையர் மகேசன் காசிராஜன் தலைமை வகித்துக் கூட்டத்தை நடத்தினார். மாவட்ட வருவாய் அலுவலர் செப்ரிராஜன், வேளாண் இணை இயக்குநர்கள் பழனிவேலு, சீத்தாராமன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மேலும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம், காஞ்சிபுரம் மாவட்ட அனைத்து பயிர் சாகுபடி விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

தனியார் சர்க்கரை நிர்வாகிகள், படாளம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைத்

தலைவர் அப்பாதுரை உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில், ஒவ்வொரு விவசாயிகளும் தங்களது கருத்தை பதிவு செய்யும் வகையில் அனைவருக்கும் ஒரு படிவம் வழங்கப்பட்டது. அந்தப் படிவத்தை 265 விவசாயிகள் பூர்த்தி செய்து அதிகாரிகளிடம் வழங்கினர். இதில், ஓரிரு விவசாயிகளைத் தவிர பெரும்பாலான விவசாயிகளும் படாளம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கே கரும்பு வழங்குவது என்று தெரிவித்தனர்.

இதுகுறித்து, தமிழ்நாடு விவசாயிகள் சங்கச் செயலாளர் நேரு பேசியதாவது:

படாளம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் உத்தரமேரூர் பகுதியைச் சேர்ந்த 3,200 விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். கடந்த ஓராண்டாக பழைய சீவரம் தனியார் சர்க்கரை ஆலை ரூ. 14.5 கோடி அளவுக்கு விவசாயிகளுக்கு பாக்கி தர வேண்டியுள்ளது. இதனால், விவசாயிகள் வாங்கிய கடனைத் திரும்ப அடைக்கும்படி வங்கிகள் நோட்டீஸ் அனுப்பி வருகிறது. இதுபோன்ற நிலை கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் இருக்காது. மேலும் 1 டன் கரும்புக்கு 1 கிலோ சர்க்கரை இலவசமாக கிடைக்கும். எனவே உத்தரமேரூர் கரும்பு விவசாயிகளை படாளம் சர்க்கரை ஆலையுடன் இணைக்க வேண்டும் என்றார். இதே கருத்தை அனைவரும் தெரிவித்தனர். அதே நேரம் தனியார் சர்க்கரை ஆலை நிர்வாகம் மட்டும் கரும்பு தங்களிடம்தான் வழங்க வேண்டும் என்று கோரிக்கை மனு வழங்கியது.இதுகுறித்து சர்க்கரைத் துறை ஆணையர் மகேசன் காசிராஜன் கூறியதாவது:

கருத்துக் கேட்புக் கூட்டத்தில் நடந்த வாதம், விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்ட கருத்து மனுக்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்று தெரிவித்தார்.

## தொடர் மழை: ராஜபாளையம் மலையடிவார ஆற்றில் நீர் வரத்து

ராஜபாளையம் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் பெய்த மழை காரணமாக மலையடிவாரத்தில் உள்ள ஆற்றில் நீர் வரத்து ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக குடிநீர் தேக்கத்தின் நீர்மட்டம் 8.5 அடியாக அதிகரித்துள்ளது.

ராஜபாளையம் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் கடந்த சில ஆண்டுகளாக போதிய மழை இல்லாததன் காரணமாக வறட்சி நிலவியது. இந்த நிலை கடந்த மாத இறுதியில் மாறி, அவ்வப்போது மிதமான மழை பெய்து வருகிறது. சில தினங்களாக நகர் பகுதி மற்றும் வனப்பகுதியில் மிதமான மழை பெய்து வந்தது. இந்நிலையில் திங்கள்கிழமை இரவு மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் உள்ள நீராவி அருவி, முள்ளிக்கடவு ஆறு, மாவரசியம்மன் கோயில் பகுதி, வழுக்கு பாறை மற்றும் மலட்டாறு போன்ற பகுதிகளில் மிதமான மழை பெய்தது.

இதன் காரணமாக தற்போது மலையடிவாரத்தில் உள்ள ஆற்றில் நீர் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் ராஜபாளையம் நகரின் குடிநீர் ஆதாரமான 6ஆவது மைல் நீர்த் தேக்கத்திற்கு வரும் நீரின் அளவு அதிகரித்துள்ளது. புதன்கிழமை காலை நிலவரப்படி நீர்தேக்கத்தின் நீர்மட்டம் 8.5 அடியாக உயர்ந்துள்ளது.

இதன் மொத்த நீர்மட்டம் 23 அடியாகும். தொடர்ந்து ஆற்றில் நீர் வரத்து இருப்பதால் நீர் மட்டம் மேலும் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### அக்.30-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

விருதுநகரில் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் அக்.30-ம் தேதி நடைபெற உள்ளது.விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் ஆட்சியர் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும். கூட்டத்தில் விருதுநகர் மாவட்ட விவசாயிகள் கலந்து கொண்டு விவசாயம் தொடர்பான கோரிக்கைகளை மனுவாக நேரில் அளித்து பயன்பெறலாம்

என மாவட்ட ஆட்சியர் அலுவலக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பல்லடத்தில் தொடர் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி

பல்லடம், சுற்று வட்டாரப் பகுதிகளில் பெய்த தொடர் மழை காரணமாக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பல்லடம், பொங்கலூர் உள்ளிட்ட பகுதிகளில் பல ஏக்கர் பரப்பளவில் மானாவாரி விவசாயம் நடைபெறுகிறது. இந்த ஆண்டு பல்லடம் சுற்றுவட்டாரப் பகுதிகளில் குறைந்தளவே மழை பெய்தது. இதனால் விதைப்புப் பணி நடைபெறவில்லை. இந்நிலையில் கடந்த இரண்டு நாள்களாக பல்லடம், பொங்கலூர் பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது. இதன்படி, பல்லடம் வட்டாட்சியர் அலுவலகம், பொங்கலூர் பி.ஏ.பி.அலுவலகத்தில் 55 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. மழை காரணமாக மக்காச்சோளம் உள்ளிட்ட பயிர் விதைப்புப் பணிகளை விவசாயிகள் துவங்கியுள்ளனர். நல்ல விலை கிடைப்பதால் சாகுபடி பரப்பை அதிகரிக்க விவசாயிகள் திட்டமிட்டுள்ளனர். மழை பெய்ய துவங்கியுள்ளதால் மக்காச் சோள சாகுபடி அதிகரித்துள்ளது.

## உலக அளவில் கருப்புத் தேயிலை உற்பத்தி அதிகரிப்பு

உலக உளவில் கருப்புத் தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளதாக சிறு, குறு விவசாயிகள் மற்றும் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.உலக அளவில் தேயிலைத் தொழில் இந்த ஆண்டு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால், இத்தொழிலைச் சார்ந்துள்ள தொழிலாளர்களும், விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கடந்த ஜனவரி முதல் செப்டம்பர் மாதம் வரை கருப்பு தேயிலை உற்பத்தி அதிகரித்திருப்பதுடன், அதற்கான விலையும் கூடுதலாக கிடைத்துள்ளது.

இதற்கு முக்கியக் காரணம் தேயிலை தூளின் பயன்பாடு அதிகரித்திருப்பதேயாகும்.கடந் ஆண்டு இந்தியாவில் மட்டும் 9 சதவீதம் கருப்பு தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது. இந்த ஆண்டு இதன் உற்பத்தி 15 சதவீதமாக உயர்ந்துள்ளது.இந்த ஆண்டு, முதல் 8 மாதங்களில் கென்யா ஏல மையத்தில் 90 சதவீதமும், இலங்கையில் 95 சதவீதமும், இந்தோனேஷியாவில் 97 சதவீதமும், இந்தியாவில் 78 சதவீதமும் விற்பனையாகி உள்ளது.

இந்தியாவில் உள்ள 8 ஏல மையங்களிலும் கருப்புத் தேயிலைக்கு தேவை அதிகரித்து வருவதாலும், அனைத்துப் பகுதிகளிலும் தேயிலைக்குச் சாதகமான சூழல் நிலவி வருவதாலும் இந்த ஆண்டு இறுதியில் கருப்புத் தேயிலை தூள் உற்பத்தி மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

### நபார்டு உழவர் மன்றக் கூட்டம்

திருப்புல்லாணி அருகே நல்லிருக்கை கிராமத்தில் நபார்டு உழவர் மன்ற கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு மன்றச் செயலர் எம்.நம்பிராசன் தலைமை வகித்தார். வேளாண்மை அலுவலர் பி.பூவேந்திரன், தோட்டக்கலைத்துறை அலுவலர் எம்.தியாகராஜன், வேளாண்மை இளநிலை பொறியாளர் எம்.ராமர் ஆகியோர் கலந்து கொண்டு திட்ட விளக்கங்களை எடுத்துக் கூறினார்கள். மன்ற உறுப்பினர் ஆர்.முத்து இருளன் தீர்மானங்களை முன்மொழிந்து பேசினார்.இக்கூட்டத்தில் விவசாயத்தை அழிக்கும் காட்டுக்கருவேல மரங்களை விவசாயிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து அழிக்கப்பாடுபட வேண்டும், வீடுகளில் திறந்தவெளியில் மலம் கழிக்காமல் தனிநபர் கழிப்பறைகளை கட்டிப் பயன்படுத்திட வேண்டும்.கிராமத்து மக்கள் மரக்கன்றுகளை நட வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## வடகிழக்குப் பருவ மழை: முன்னேற்பாடு ஆலோசனைக் கூட்டம்

ஆத்தூர் கோட்டாட்சியர் அலுவலகத்தில் கோட்டாட்சியர் சீ.ஜெயச்சந்திரன் தலைமையில் வடகிழக்குப் பருவ மழை முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், ஆத்தூர் அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் அசோக்குமார், பொதுப்பணித் துறை உதவிப் பொறியாளர் டி.மாணிக்கம், நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர் ஏ.ராதாகிருஷ்ணன், பொது சுகாதார ஆய்வாளர் டி.கந்தசாமி, நகராட்சி ஆணையர் (பொ) ராமகிருஷ்ணன், தீயணைப்புத் துறை அலுவலர்கள் கோவிந்தன், ராமநாதன், தம்மம்பட்டி, தெடாவூர், செந்தாரப்பட்டி, கெங்கவல்லி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள், முக்கிய அலுவலர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

## நாமகிரிப்பேட்டையில் ரூ.12 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம்

நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் செவ்வாய்க்கிழமை நடந்த மஞ்சள் ஏலத்தில், 275 மூட்டைகள் ரூ.12 லட்சத்துக்கு ஏலம் போயின.

நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் மஞ்சள் ஏலம் செவ்வாய்க்கிழமை நடந்தது. இதில், தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா, சேலம், ஆத்தூர், தலைவாசல் சுற்றுப்பகுதி கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் மஞ்சள் மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

இதில், மொத்தம் 275 மூட்டைகள் ஏலத்துக்கு வந்தன. இதில், ஒரு குவிண்டால் விரலி ரூ.7 ஆயிரத்து 789 முதல் ரூ.9 ஆயிரத்து 309-வரையும், முண்டு ரகம் ரூ.6 ஆயிரத்து 839 முதல் ரூ.8 ஆயிரத்து 109-

வரைக்கும், பனங்காலி ரகம் ரூ.9 ஆயிரத்து 500 முதல் ரூ.13 ஆயிரத்து 500-வரையும் ஏலம்போனது. விற்பனைக்கு வந்த 275 மஞ்சள் மூட்டைகள் ரூ.12 லட்சத்துக்கு ஏலம் போனதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

**வெல்ல ஆலைகளில் திடீர் ஆய்வு: 1,600 கிலோ சர்க்கரை பறிமுதல்**

பரமத்தி வேலூர் வட்டத்தில் உணவுப் பாதுகாப்புத் துறையினர் புதன்கிழமை வெல்ல ஆலைகளில் திடீர் ஆய்வு செய்தனர். இதில், வெல்லத்தில் கலப்பதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 1,600 கிலோ சர்க்கரை, சர்க்கரை கலந்த அச்சு வெல்லம் 450 கிலோ, 510 கிலோ நாட்டு சர்க்கரையைப் பறிமுதல் செய்தனர்.

பரமத்தி வேலூர் வட்டம், சோழசிராமணி, ஜேடர்பாளையம், பிலிக்கல்பாளையம், கபிலர்மலை சுற்றுப் பகுதிகளில் விவசாயிகள் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்துள்ளனர். இங்கு விளையும் கரும்புகள் பிலிக்கல்பாளையத்தை சுற்றி உள்ள வெல்ல ஆலைகளில் விற்பனை செய்யப்படுகிறது. இந்த வெல்ல ஆலைகளில் உருண்டை, அச்சு வெல்லம், நாட்டுச் சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது.

இங்கு உற்பத்தி செய்யப்படும் வெல்லம், பிலிக்கல்பாளையம் வெல்ல ஏலச் சந்தையில் விற்பனை செய்யப்படுகிறது. இப் பகுதியில் உள்ள வெல்ல ஆலைகளில் வெல்லப் பாகுடன் சர்க்கரை (அஸ்கா), ரசாயனப் பொருள்கள் கலப்பதாக நாமக்கல் மாவட்ட ஆட்சியர் வி. தட்சிணாமூர்த்திக்கு விவசாயிகள் அளித்த தகவலின்படி, உணவுப் பாதுகாப்புத் துறையினருக்கு ஆய்வு செய்ய உத்தரவிட்டார். இதன்படி, மாவட்ட உணவுப் பாதுகாப்பு நியமன அலுவலர் தமிழ்ச்செல்வன் தலைமையில் உணவுப் பாதுகாப்பு அலுவலர்கள் சிவசண்முகம், சிவநேசன், இளங்கோவன், முத்துசாமி, பாலு, பாஸ்கர் ஆகியோர்

கொண்ட குழுவினர் 20-க்கும் மேற்பட்ட வெல்ல ஆலைகளில் ஆய்வு மேற்கொண்டனர்.

இதில், 2 வெல்ல ஆலையில் அச்சு வெல்லத்திலும், நாட்டுச் சர்க்கரையிலும் சர்க்கரை (அஸ்கா) கலந்திருப்பது தெரியவந்தது. இதையடுத்து, அச்சு வெல்லம், நாட்டுச் சர்க்கரை ஆகியவற்றின் மாதிரிகள் எடுக்கப்பட்டு உணவு பகுப்பாய்வுக் கூடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேலும், பதுக்கி வைக்கப்பட்டிருந்த 1,600 கிலோ சர்க்கரை மூட்டைகள், 450 கிலோ அச்சு வெல்லம், 510 கிலோ நாட்டுச் சர்க்கரை ஆகியவற்றையும் பறிமுதல் செய்து, அவற்றின் மாதிரிகளையும் பகுப்பாய்வுக்கு அனுப்பினர்.

பகுப்பாய்வு அறிக்கைபடி தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டால் உணவுப் பாதுகாப்பு தர நிர்ணயச் சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என, மாவட்ட நியமன அலுவலர் தமிழ்செல்வன் எச்சரிக்கை விடுத்தார். மேலும், இதுபோன்ற ஆய்வுகள் தொடர்ந்து நடைபெறும் என்றார்

## ஏற்காடு காபி வாரியத்தில் மானிய விலையில் காபி நாற்றுக்கள்

ஏற்காடு காபி வாரியத்தில் மானிய விலையில் காபி நாற்றுகள் வழங்கப்பட உள்ளன.

இதுதொடர்பாக ஏற்காடு காபி வாரிய முதுநிலைத் தொடர்பு அலுவலர் கருத்தமணி கூறியது:

கடந்த ஆண்டு சேர்வராயன் மலையில் அதிக அளவில் தண்டு துளைப்பான் நோய்த் தாக்கத்தால் காபி செடிகளில் மகசூல் பாதிக்கப்பட்டுள்ளது. காபி தோட்டங்களில் புதிய காபி நாற்றுக்கள் நடவு செய்ய, காபி செடிகளின் இடைவெளியை நிரப்பவும் மகசூலை

அதிகரிக்கவும் மானிய விலையில் தரமான காபி நாற்றுகளை வழங்க 31 குழுக்கள் மூலம் மலை கிராமங்களில் நாற்றுகள் வளர்த்து பராமரிக்கப்பட்டுள்ளன.

தற்சமயம் பருவ மழை பெய்து வருவதால் ஆயிரம் சிறு, குறு விவசாயிகளுக்கு 5 லட்சத்துக்கும் மேற்பட்ட காபி நாற்றுகளை மானிய விலையில் காபி வாரிய இணை இயக்குநர் மஞ்சுநாத் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

ஏற்காடு காபி வாரிய அதிகாரிகள் மூலம் செம்மநத்தம், பெரியகாடு, சோலூர், மோட்டூர், மேலூர் பகுதிகளில் சுமார் 1.20 லட்சம் காபி நாற்றுகள் வழங்கப்பட உள்ளன. தொடர்ந்து காபி தோட்டங்களில் தண்டுதுளைப்பானால் பாதிக்கப்பட்ட சிறு, குறு விவசாயிகள் தேவைப்படும் காபி நாற்றுகளை தக்க சான்றிதழ்களைக் கொடுத்துப் பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம்.

### கூலியாள்கள் கிடைக்காமல் அவதிப்படும் விவசாயிகள்

ஆத்தூர் மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் கடும் வறட்சியால் மாற்றுப் பயிர் நட்டும் அதில் களைகள் அதிகம் வளருவதால் விவசாயிகள் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.ஆத்தூர், சுற்றுப்புற கிராமங்களில் விவசாயிகள் கடும் வறட்சியால் அவதிப்பட்டு வருகின்றனர். இந்த நிலையில் மாற்றுப் பயிராக மக்காச்சோளம் பயிரிட்டுள்ளனர். ஆனால், சமீபத்தில் பெய்த மழையால் களைகள் அதிகம் வளர்ந்து பயிர் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துகிறது.

களை வெட்ட ஆள்கள் கிடைக்காமல் விவசாயிகள் திணறி வருகின்றனர். அப்படியே கிடைத்தாலும் கூலி அதிகமாக கேட்டு வேலைக்கு வராமல் போய்விடுகின்றனர். இதனால் விவசாயிகள் திண்டாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

நூறுநாள் வேலைக்கு தொழிலாளர்கள் செல்வதால் ஆள்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. ஆகையால் ஊராட்சி சார்பில் விவசாயத்திற்கும் ஆள்கள் அனுப்ப அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வடசித்தூர் கால்வாயில் தண்ணீர் திறப்பு 5 ஆயிரத்து 59 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்



நெகமம்

வடசித்தூர் கால்வாயில் நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது. இதன் மூலம் 5 ஆயிரத்து 59 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது.

திருமூர்த்தி அணை

பரம்பிக்குளம் அணையில் இருந்து காண்டூர் கால்வாய் மூலம் திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது. இந்த நிலையில் 4-வது மண்டல பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.இதன்பேரில் முதல்- அமைச்சர்

ஜெயலலிதா திருமூர்த்தி அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடுமாறு உத்தரவிட்டார். இதன்படி நேற்று முன்தினம் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

கால்வாய் திறப்பு

அணையில் தண்ணீர் திறந்து விடப்பட்டதால் வடசித்தூர் கால்வாய்க்கு தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளது. இதனை தொடர்ந்து இந்த கால்வாயில் தண்ணீர் திறந்து விடும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பகிர்மான குழு தலைவர் ஆண்டிபாளையம் நல்லதம்பி தலைமை தாங்கினார். பொள்ளாச்சி பொறியாளர் முத்துசாமி, உதவி செயற்பொறியாளர் ரங்கநாதன், உதவி பொறியாளர் சதீஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.நிகழ்ச்சியில் முத்துகருப்பண்ணசாமி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு தண்ணீரை திறந்து வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

வடசித்தூர் கால்வாய் மூலம் 5 ஆயிரத்து 59 ஏக்கர் விவசாய நிலம் பாசன வசதி பெறும். இந்த பகுதியில் பருவமழை சரிவர பெய்யாததால் நிலத்தடி நீர்மட்டம் குறைவாக உள்ளது. எனவே பி.ஏ.பி. தண்ணீரை விவசாயிகள் நன்கு பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

விவசாயிகள் பாதிப்பு

கோதவாடி குளத்திற்கு தண்ணீர் கொண்டு வரவேண்டும் என்று சட்டமன்றத்தில் கோரிக்கை வைத்தேன். இதன்படி கோதவாடி குளம் தற்போது தூர்வாரப்பட்டு உள்ளது. இந்த குளத்திற்கு தண்ணீர் கொண்டு வர அனைத்து முயற்சிகளும் நடைபெற்று வருகிறது. பி.ஏ.பி. கால்வாயில் குறைந்த அளவே தண்ணீர் செல்வதால் விவசாயிகள் பாதிக்கப்படுவதாக கூறப்படுகிறது. எனவே இந்த கால்வாயில் வளர்ந்து உள்ள புதர்கள் மற்றும் சேறுகளை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார். நிகழ்ச்சியில் கூட்டுறவு வங்கி இயக்குனர்

பாலசுப்பிரமணியம், ஊராட்சி மன்ற தலைவர்கள் பட்டீஸ்வரன், குணசேகரன், சிவசாமி உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## தொடர் மழையால் நீர்வரத்து அதிகரிப்பு: பெருஞ்சாணி அணை கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை



தொடர் மழைகாரணமாக அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் பெருஞ்சாணி அணை கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

தொடர் மழை

குமரி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இந்த மழை ஒரே நேரத்தில் மாவட்டத்தின் அனைத்துப் பகுதியிலும் இல்லாவிட்டாலும் ஆங்காங்கே பரவலாக பெய்து வருகிறது. நேற்று காலை நாகர்கோவில் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் மழை பெய்தது. இந்த மழை ஒரு மணி நேரம் வரை நீடித்தது. பின்னர் ஓய்ந்தது. இதனால் பள்ளி, கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவ- மாணவிகள், அரசு மற்றும் தனியார் அலுவலகங்களுக்கு செல்லும் ஊழியர்கள் குடை பிடித்தபடி சென்றதை காண முடிந்தது.இதேபோல் மாவட்டத்தின்

பல்வேறு பகுதிகளிலும் நேற்று பரவலாக மழை பெய்திருந்தது. நேற்று காலை 6 மணி வரையிலான 24 மணி நேரத்தில் குமரி மாவட்டத்தில் பெய்த மழை அளவு விவரம் (மி.மீ.) வருமாறு:- பேச்சிப்பாறை- 60, பெருஞ்சாணி- 30.4, சிற்றார் 1- 13.8, சிற்றார் 2- 33, மாம்பழத்துறையாறு- 37, முக்கடல்- 48, ஆணைக்கிடங்கு- 42, அடையாமடை- 22, கோழிப்போர்விளை- 14.7, முள்ளங்கினாவிளை- 8, புத்தன் அணை- 31, பூதப்பாண்டி- 18.5, சுருளோடு- 31.6 என்ற அளவில் மழை பெய்திருந்தது.

நீர்வரத்து அதிகரிப்பு

தொடர்மழையின் காரணமாக அணைகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது. நேற்றைய நிலவரப்படி பேச்சிப்பாறை அணைக்கு வினாடிக்கு 1,066 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. பெருஞ்சாணி அணைக்கு 435 கன அடி தண்ணீர் வந்தது. அணையில் இருந்து 50 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. சிற்றார்-1 அணைக்கு 310 கன அடி தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து 200 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இந்த அணையில் இருந்து உபரியாக திறந்துவிடப்பட்ட தண்ணீர் நேற்று நிறுத்தப்பட்டது. மாம்பழத்துறையாறு அணைக்கு 34 கன அடி தண்ணீர் வருகிறது. அணை நிரம்பி இருப்பதால் அணைக்கு வரும் 34 கன அடி தண்ணீர் உபரியாக திறந்து விடப்படுகிறது. குமரி மாவட்ட அணைகளுக்கு மொத்தம் 1,835 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. நேற்று பகலில் மழை இல்லாததால் அணைகளுக்கு வரும் தண்ணீரின் அளவு குறைந்தது.

வெள்ள அபாய எச்சரிக்கை

அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்திருப்பதால் அணைகளின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து வருகிறது. முக்கடல் அணை நிரம்பி

மறுகால் பாய்ந்து கொண்டிருக்கிறது. பெருஞ்சாணி அணை நீர்மட்டம் நேற்று 71 அடியாக உயர்ந்ததால் நேற்று பிற்பகலில் இந்த அணை தண்ணீர் பாய்ந்தோடும் கரையோரப் பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் பெருஞ்சாணி அணையில் 2-வது முறையாக வெள்ள அபாய எச்சரிக்கை விடப்படுவது குறிப்பிடத்தக்கது.

வீடு இடிந்தது

திற்பரப்பு அருவியில் மழை வெள்ளம் கொட்டுகிறது. குலசேகரம் பகுதியில் கடந்த சில தினங்களாக அடைமழை பெய்து வருகிறது. இந்த மழையுடன் இடி- மின்னல், காற்றும் இருப்பதால் மின்தடை ஏற்படுவதோடு, மரங்களும் முறிந்து விழுகின்றன. குலசேகரம் அருகே கோட்டூர்கோணம் கிராமத்தில் ஒரு வீட்டின் சுவர் இடிந்து விழுந்தது. ஆனால் வீட்டின் உரிமையாளர் ராஜப்பன் (வயது 60) என்ற கூலித்தொழிலாளி, அவருடைய மனைவி வேலம்மாள் (53) ஆகியோர் காயமின்றி உயிர் தப்பினர்.

## பேரிடர் தடுப்பு விழிப்புணர்வு பேரணி கலெக்டர் பழனிசாமி தொடங்கி வைத்தார்



நாகையில் நடைபெற்ற பேரிடர் தடுப்பு விழிப்புணர்வு பேரணியை கலெக்டர் பழனிசாமி தொடங்கி வைத்தார்.

விழிப்புணர்வு பேரணி

நாகையில் பேரிடர் இன்னல் தடுப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. நாகை உதவி கலெக்டர் அலுவலகத்தில் இருந்து தொடங்கிய இந்த பேரணியை நாகை மாவட்ட கலெக்டர் பழனிசாமி கொடியசைத்து தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

புயல், மழை, வெள்ளம், நிலநடுக்கம், தீ உள்ளிட்ட இயற்கை பேரிடர் ஏற்படும் காலங்களில் பொதுமக்கள் முன் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும். இயற்கை சீற்றங்கள் குறித்து வானிலை ஆய்வு மையம் உடனுக்குடன் வழங்கும் தகவல்களை கொண்டு மாவட்ட நிர்வாகத்தினால் பொதுமக்களை பாதுகாப்பான இடங்¢களில் தங்க வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், அரசு விடுக்கும் எச்சரிக்கையை பின்பற்றினால் எந்தவித உயிர் இழப்பும் இன்றி இயற்கை இன்னல்களை சமாளிக்கலாம். எதிர்பாராதவிதமாக ஏற்படும் தீ விபத்தின் போது உடனடியாக தீப்பற்றி கொண்ட வீட்டுக்கு அருகில் உள்ள வீடுகளுக்கும் தீ பரவாமல் தடுப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும். மழை காலங்களில் கொசுக்களால் ஏற்படும் மலேரியா, டெங்கு போன்ற வைரஸ் நோய் தாக்குதல்களிலிருந்து தற்காத்துக்கொள்ள வீட்டையும், சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்து கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

முக்கிய வீதிகளின் வழியாக...

இந்த பேரிடர் விழிப்புணர்வு பேரணி பப்ளிக் ஆபீஸ் ரோடு, ஏழைப்பிள்ளையார் கோவில், தம்பிதுரை பூங்கா உள்ளிட்ட முக்கிய வீதிகளின் வழியாக சென்று புதிய பஸ் நிலையத்தில் நிறைவடைந்தது. பேரணியில் நாகை இ.ஐ¤.எஸ். பிள்ளை கல்லூரியை சேர்ந்த 150-க்கும்

மேற்பட்ட மாணவ, மாணவிகள், கிராம நிர்வாக அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள், மண்டல துணை தாசில்தார் மற்றும் மாவட்ட பேரிடர் மேலாண்மை அலுவலர்கள் கலந்து கொண்டு இயற்கை பேரிடர் காலங்களில் பொதுமக்கள் தங்களை பாதுகாத்து கொள்வது குறித்த விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளுடன் கோஷங்கள் எழுப்பியவாறு சென்றனர். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் பெஞ்சமின்பாபு, உதவி கலெக்டர் ஜெயராஜ், தாசில்தார் தமீமுல்அன்சாரி, மாவட்ட பேரிடர் மேலாண்மை தாசில்தார் ராமச்சந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## 2-வது சீசனை முன்னிட்டு சிம்ஸ் பூங்காவில் குவியும் சுற்றுலா பயணிகள்



குன்னூர்

குன்னூர் சிம்ஸ் பூங்காவில் 2-வது சீசனை முன்னிட்டு சுற்றுலா பயணிகள் குவிந்து வருகிறார்கள்.

2-வது சீசன்

நீலகிரி மாவட்டம் மலை மாவட்டம் என்பதால் சுற்றுலா தலங்கள் அதிக அளவில் உள்ளன. மாவட்டத்தில் ஆண்டுதோறும் 2 சீசன்கள் நிலவுகின்றன. ஏப்ரல், மே மாதம் கோடை சீசன் ஆகும். 2-வது சீசன் அக்டோபர், நவம்பர் மாதங் களாகும்.2-வது சீசன் நேரத்தில் மழை, கடுங்குளிர் என சீதோஷ்ண நிலை உள்ளதால் தேனிலவு தம்பதிகளும்,

வடநாட்டு சுற்றுலா பயணிகளும் அதிகளவில் வருகிறார்கள்.

சிம்ஸ் பூங்கா

குன்னூர் பகுதியில் முக்கிய சுற்றுலா தலமாக சிம்ஸ் பூங்கா உள்ளது. இந்த பூங்கா தோட்டக்கலைத்துறை நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகிறது. 2-வது சீசனுக்காக சுமார் 1½ லட்சம் மலர் நாற்றுகள் நடவு செய்யப்பட்டன. இவைகளில் தற்போது பூக்கள் பூத்து அழகாக காட்சி அளிக்கின்றன.சிம்ஸ் பூங்கா மலர்களுக்கு மட்டுமின்றி நூற்றாண்டு பழமை வாய்ந்த பல்வேறு அபூர்வ மரங்களுக்கும் பெயர் பெற்றதாக உள்ளது. குறிப்பாக ருத்திராட்சை மரம் இந்த பூங்காவில் இருப்பது சுற்றுலா பயணிகளை கவர்ந்து வருகிறது.

குவியும் சுற்றுலா பயணிகள்

குளு, குளு 2-வது சீசன் நிலவுவதால் குன்னூர் சிம்ஸ் பூங்காவில் சுற்றுலா பயணிகள் குவிந்து வருகிறார்கள். நேற்று கர்நாடகா, கேரளா மற்றும் வடமாநிலங்களில் இருந்து அதிகளவில் சுற்றுலா பயணிகள் வந்தனர். அவர்கள் சிம்ஸ் பூங்காவில் உள்ள மலர்களை கண்டு ரசித்ததுடன், அதன் முன்பு நின்று புகைப்படம் எடுத்து மகிழ்ந்தனர். மேலும் அங்குள்ள நூற்றாண்டு பழமை வாய்ந்த மரங்களை கண்டு ரசித்து சென்றனர். இது குறித்து சுற்றுலா பயணிகள் சிலர் கூறும் போது, சிம்ஸ் பூங்காவை கண்டு ரசிக்க மிகவும் அழகாக இருந்தது. இங்குள்ள காலநிலையை அனுபவிக்க இதமாக இருந்தது. மலர்களை பார்க்க கண்களுக்கு குளிர்ச்சியாக இருந்தது என்று தெரிவித்தனர்.

## வலைகளில் சிக்கும் கடல் ஆமைகளை விடுவிக்க புதிய கருவி வன பாதுகாவலர் தகவல்




மன்னார் வளைகுடா கடல்பகுதியில் மீனவர்களின் வலைகளில் சிக்கி பலியாகும் ஆமைகளை பாதுகாக்கும் வகையில் வலைகளில் இருந்து தானாக ஆமைகளை விடுவிக்கும் கருவி மீனவர்களுக்கு வழங்க புதிய திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக வன பாதுகாவலர் தெரிவித்தார்.

<u>கடல் ஆமைகள்</u>

இந்தியாவின் மிகப்பெரிய கடல்வாழ் தேசியபூங்கா என்றழைக்கப்படும் மன்னார் வளைகுடா கடல்வாழ் தேசிய பூங்கா ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரம் முதல் தூத்துக்குடி வரையிலான கடல்பகுதியில் அமைந்துள்ளது. இந்த பூங்காவில் 3,600–க்கும் மேற்பட்ட கடல் தாவரங்களும், அரிய வகை உயிரினங்களும் வாழ்ந்து வருகின்றன. ஏறத்தாழ 117 வகையான பவளப்பாறைகள் இந்த பகுதியில் இருப்பதாக கண்டறியப்பட்டுஉள்ளது. 21 தீவுகளை உள்ளடக்கிய மன்னார் வளைகுடாவின் மொத்த பரப்பளவு 10,500 சதுர கிலோ மீட்டராகும். இதில் 560 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு தேசிய பூங்காவாக செயல்பட்டு வருகிறது. இந்த மன்னார் வளைகுடா பகுதியில் பல்லுயிர் பாதுகாப்பு

மற்றும் பசுமையாக்கும் திட்டத்தின்கீழ் தற்போது பல புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இதுகுறித்து வன பாதுகாவலர் தீபக்பெல்கி கூறியதாவது:– இந்த கடல்பகுதியில் வாழும் அபூர்வ பச்சை நிற ஆமைகள், ஆலிவ்ரிட்லி எனப்படும் ஆமைகள் உள்ளிட்ட 5 வகை ஆமைகள் அழியும் தருவாயில் உள்ளன. குறிப்பாக அபூர்வ ஆமைகள் மீனவர்களின் வலைகளில் சிக்கி அழிந்து வருகின்றன. மீனவர்களிடம் ஏற்படுத்தப்பட்டுள்ள விழிப்புணர்வு காரணமாக வலைகளில் சிக்கும் ஆமைகளை மீனவர்கள் மீண்டும் கடலுக்குள் விட்டு வருகின்றனர்.

<u>செயல்முறை விளக்கம்</u>

பொதுவாக ஆமைகள் கடலுக்குள் சுமார் 40 நிமிடங்கள் வரை இருந்துவிட்டு கடல்நீருக்கு மேல் வந்து மூச்சுவிட்டு சுவாசித்த பின்னர் மீண்டும் கடலுக்குள் சென்றுவிடும் வழக்கம் உள்ளது. வலைகளில் சிக்கும் ஆமைகளை மீனவர்கள் மீன்பிடிபட்ட பின்னர் கரைக்கு கொண்டு வர நீண்ட நேரமாகும் என்பதால் அதற்குள் இறக்கும் நிலையை எட்டிவிடுகின்றன. இவ்வாறு அழியும் ஆமைகளை காப்பதற்காக தற்போது ஆமைகளை விடுவிக்கும் புதிய கருவி வழங்கப்பட உள்ளது. இந்த கருவிகளை மீனவர்களின் வலைகளில் பொருத்திவிட்டால் வலைகளில் சிக்கும் ஆமைகளை தானாகவே விடுவித்து கொள்ளும். இதன்மூலம் ஆமைகள் வலைகளில் சிக்கி நீண்டநேரம் போராடி உயிரிழக்கும் ஆபத்து தடுக்கப்படும். சுமார் ரூ.10,000 மதிப்புள்ள இந்த கருவியின் பயன்பாடு குறித்து மீனவர்களுக்கு விரைவில் செயல்முறை விளக்கம் செய்து காட்டப்படும்.

அடுத்த ஆண்டு முதல் இந்த கருவி இலவசமாக மீனவர்களின் படகுகளுக்கு வழங்க திட்டமிடப்பட்டு உள்ளது. இதுதவிர, கடல் ஆமைகளை அழிவில் இருந்து காப்பதற்காக அதன் அவசியம் குறித்து மீனவர்களுக்கு போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டு உள்ளது. பொதுவாக கடல் ஆமைகள் கடலில் வாழும் ஜெல்லி மீன்களை உணவாக உட்கொள்ளும். இந்த ஜெல்லி மீன்கள்தான் மீன்களின்

முட்டைகள், மீன்குஞ்சுகள் முதலியவற்றை கொத்துக்கொத்தாக உண்டு வருகின்றன. இதன்காரணமாக மீன்களின் பெருக்கம் குறைந்து வருவதால் கடல்ஆமைகளை பாதுகாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு உள்ளது. கடல் ஆமைகள் ஜெல்லி மீன்களை உண்டுவிடுவதால் கடல்பகுதியில் மீன்குஞ்சுகள் பாதுகாப்பதோடு, மீன்களின் பெருக்கமும் அதிகரிக்கும். எனவே, கடல் ஆமைகளை காப்பாற்ற போர்க்கால நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை: முல்லைப்பெரியாறு அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு



கூடலூர்,

நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் முல்லைப்பெரியாறு அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. முல்லைப்பெரியாறு அணை

தேனி மாவட்டம் லோயர்கேம்பில் இருந்து பழனிசெட்டிபட்டி வரை சுமார் 14 ஆயிரத்து 707 ஏக்கர் பரப்பளவில் இருபோக நெல்சாகுபடி நடந்து வருகிறது. இந்த பகுதிக்கு முல்லைப்பெரியாறு அணையில் இருந்து பெறப்படும் தண்ணீரை பயன்படுத்தி வருகின்றனர். மேலும் கூடலூர், கம்பம், உத்தமபாளையம், கோம்பை ஆகிய பகுதிகளுக்கு முல்லைப்பெரியாற்றில் இருந்து லோயர்கேம்ப் கூட்டுக்குடிநீர் திட்டம் மூலம் குடிநீர் வினியோகம் செய்யப்படுகிறது. கடந்த மாதம் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாததால் நீர்மட்டம் சரிந்து 116.90 அடியாக காணப்பட்டது. வினாடிக்கு 497 கனஅடி நீர் வரத்து இருந்தது.

நீர்வரத்து அதிகரிப்பு

தற்போது நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. நேற்று அணையின் நீர்மட்டம் 118 அடியாக உயர்ந்தது. நீர்வரத்து வினாடிக்கு 1,554 கனஅடியாக இருந்தது. வினாடிக்கு 511 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. நீர் இருப்பு 2 ஆயிரத்து 267 மில்லியன் கன அடியாக உள்ளது. வைகை அணையின் நீர்மட்டம் நேற்று 48.46 அடியாக இருந்தது. வினாடிக்கு 500 கனஅடி நீர்வரத்து உள்ளது. அணையில் இருந்து 60 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. நீர் இருப்பு 1,798 மில்லியன் கனஅடியாக உள்ளது.

நேற்று முன்தினம் பெய்த மழை அளவு விவரம் வருமாறு (மில்லி மீட்டரில்):-

பெரியாறு அணை - 0.8, உத்தமபாளையம் - 1.6, வீரபாண்டி - 10, வைகை அணை - 18.6, மஞ்சளாறு அணை - 28, சோத்துப்பாறை அணை - 46.

## தூத்துக்குடியில் கடல்வாழ் உயிரினங்கள் குறித்த விழிப்புணர்வு கண்காட்சி கலெக்டர் ரவிகுமார் தொடங்கி வைத்தார்



தூத்துக்குடி

தூத்துக்குடியில் கடல்வாழ் உயிரினங்கள் குறித்த விழிப்புணர்வு கண்காட்சியை மாவட்ட கலெக்டர் ம.ரவிகுமார் நேற்று காலை தொடங்கி வைத்தார்.

<u>கண்காட்சி</u>

மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பக அறக்கட்டளை சார்பில் தூத்துக்குடி கால்டுவெல் மேல்நிலைப்பள்ளியில் கடல்வாழ் உயிரினங்கள் குறித்த விழிப்புணர்வு கண்காட்சி நேற்று நடந்தது. கண்காட்சி தொடக்க விழாவுக்கு தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் இயக்குநர் டி.எஸ்.டாங்கே தலைமை தாங்கினார். சி.த.செல்லப்பாண்டியன் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக மாவட்ட கலெக்டர் ம.ரவிகுமார் கலந்து கொண்டு கண்காட்சியை திறந்து வைத்து பேசும் போது கூறியதாவது:–

<u>15–ந் தேதி வரை</u>

இந்தியா சுமார் 8 ஆயிரம் கிலோ மீட்டர் நீள கடற்கரையை கொண்டுள்ளது. இதில் 1,076 கிலோ மீட்டர் நீள கடற்கரை தமிழ்நாட்டில் உள்ளது. இதில் மன்னார் வளைகுடா உயிர்க்கோள காப்பக பூங்கா அமைந்து உள்ளது. இங்கு பல்வேறு அரிய வகை உயிரினங்கள் உள்ளன. இந்த உயிரினங்களை பாதுகாப்பது தொடர்பாகவும், பள்ளி, கல்லூரி

மாணவ–மாணவிகளுக்கு அரியவகை கடல்வாழ் உயிரினங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும் இந்த கண்காட்சி நடக்கிறது. கண்காட்சி வருகிற 15–ந் தேதி (அதாவது நாளை) வரை நடைபெற உள்ளது.

இதில் அரிய வகை உயிரினங்களான கடல் ஆமை, கடல் பசு, கடல் அட்டை, பவளப்பாறைகள், வண்ண மீன்கள், சிப்பி வகைகள், கடல் பாசிகள், சங்குகள் மற்றும் பதப்படுத்தப்பட்ட அரிய வகை மீன் வகைகள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. கண்காட்சியை அனைவரும் பார்வையிட்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கலெக்டர் ரவிகுமார் பேசினார்.நிகழ்ச்சியில் வன உயிரின காப்பாளர் தீபக்.எஸ்.பில்கி, மாவட்ட வன அலுவலர் எஸ்.ஏ.ராஜு, உதவி மக்கள் தொடர்பு அலுவலர் தே.ராம்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## பலத்த மழையால் வீடுகளை இழந்தவர்களுக்கு நிவாரணத்தொகை மாவட்ட வருவாய் அலுவலர் வழங்கினார்



திருப்பூர் மாவட்ட வருவாய் அலுவலர் பிரசன்னராமசாமி நேற்று காங்கயம் தாலுகா அலுவலகத்தில் ஆய்வு மேற்கொண்டார். அப்போது கடந்த 12–ந்தேதி திருப்பூர், காங்கயம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் விடிய விடிய பலத்த மழை பெய்தது. இந்த பலத்த மழையின் காரணமாக காங்கயம் அருகேயுள்ள முள்ளிப்புரம் என்ற ஊரை சேர்ந்த பழனிசாமி, நத்தக்காடையூர் பகுதியை ராமசாமி நாடார், சரஸ்வதி ஆகிய 3 பேரின் வீடுகள் இடிந்து விழுந்தது.இந்த நிலையில் நேற்று காங்கயம் வந்த மாவட்ட வருவாய் அலுவலர் பிரசன்னா ராமசாமி இந்த 3 பேரின் வீடுகளையும் பார்வையிட்டார். பின்னர் வீடுகளை இழந்த 3 பேரின் குடும்பத்துக்கும் தலா ரூ.5 ஆயிரத்திற்கான நிவாரணத்தொகையை மாவட்ட வருவாய் அலுவலர் பிரசன்னா ராமசாமி வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் காங்கயம் தாசில்தார் ராஜகோபால், துணை தாசில்தார்கள் மாணிக்கவேலு, தங்கவேல், மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## உடுமலை பகுதிகளில் கைகொடுக்கும் காற்றாலை மின்சாரம்



மனிதன் உயிர் வாழ உணவு, உடை, இருப்பிடம் எந்த அளவுக்கு முக்கியமோ அந்த அளவுக்கு மின்சாரமும் மிகவும் இன்றியமையாத ஒன்றாகி விட்டது. மின்சாரம் கண்டறிவதற்கு முன் வாழ்ந்து பழக்கப்பட்ட மனிதன், மின்சாரத்தின் பயனை அறிந்த பிறகு, அந்த மின்சாரம் இல்லாமல் ஒரு நாள் இருப்பதற்குள் திணறி விடுகிறான்.

செல்போனுக்கு சார்ஜ் நிரம்புவது முதல் தொழிற்சாலை உபயோகம் வரை அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற மின்சாரத்தின் தேவை உள்ளது. அத்தகைய மின்சாரத்தை அணைக்கட்டுகளில் பாயும் நீர் மூலமாகவும், காற்றாலைகள் மூலமாகவும், நிலக்கரியை எரித்து அனல் மின்நிலையங்கள் மூலமாகவும், அணுவை பிளந்து அணு உலை மூலமாகவும், சூரியஒளி சக்தியை பயன்படுத்தியும் மின்சாரம் தயாரித்து வருகிறார்கள்.

<u>காற்றாலை மின்சாரம்</u>

நவீன மின்சாதனங்களின் உதயம், தொழிற்சாலைகளின் பெருக்கம் காரணமாக மின் பயன்பாடு பெருகி விட்டது. மின்தேவையை பூர்த்தி செய்வதற்காக இயற்கை சக்தியின் மூலம் கிடைக்கும் மின்சாரத்தை

பெறுவதில் அதிக முனைப்பு காட்டி வருகிறார்கள். காற்று மூலம் கிடைக்கும் காற்றாலை மின்சாரம் தற்போதைய மின்தேவைக்கு கைகொடுத்து உதவி வருகிறது.

காற்றாலை மின் உற்பத்தியில் இந்திய அளவில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது. இங்கு 50–க்கும் மேற்பட்ட இடங்கள் காற்றாலை மின் உற்பத்தி செய்வதற்கு ஏற்ற பகுதிகளாக அமைந்துள்ளது. தமிழகத்திற்கு நாள் ஒன்றுக்கு 13 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் தேவைப்படுகிறது. மின்உற்பத்தியில் 20 சதவீதம் காற்றாலைகள் மூலம் கிடைக்கிறது. காற்றாலை மின் உற்பத்தியில் திருநெல்வேலி, கோவை, திருப்பூர், தேனி மாவட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளன.

<u>பாலக்காடு கணவாய்</u>

திருப்பூர் மாவட்டத்தில் பல்லடம், உடுமலை, பூளவாடி, குடிமங்கலம், கொங்கல் நகரம், புதுப்பாளையம், வாளவாடி உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவு காற்றாலைகள் இயங்கி வருகிறது. இங்கு 3 ஆயிரத்து 500 மெகாவாட் திறனுடைய 5 ஆயிரத்து 580 காற்றாலைகள் இயங்கி வருகிறது. மேற்கு தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள பாலக்காடு கணவாய் வழியாக வரும் காற்றை மையமாக கொண்டு இந்த பகுதிகளில் காற்றாலைகள் நிறுவப்படுகின்றன.

மே மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரையிலான 5 மாதங்களில் வீசும் காற்றின் மூலம் மின்சாரம் அதிகளவு உற்பத்தி செய்யப்படுகிறது. ஒரு காற்றாலையின் ஆயுட்காலம் 25 ஆண்டுகள் ஆகும். இந்த பகுதிகளில் 225 கிலோ வாட் முதல் 2,100 கிலோ வாட் திறனுடைய காற்றாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு மெகாவாட் திறனுடைய காற்றாலைகள் அமைப்பதற்கு ரூ.5½ கோடி செலவாகிறது. காற்றின் வேகம் வினாடிக்கு 3 மீட்டர் என்ற அளவில் இருந்தால் காற்றாலைகள் இயங்கத்தொடங்கும். காற்றாலைகள் முதலில் இயங்குவதற்கு மின்சாரம் தேவைப்படும்.

வினாடிக்கு 13 மீட்டர் வேகத்தில் காற்று வீசும் போது காற்றாலைகள் முழு திறனுடன் இயங்கி முழுமையான அளவு மின் உற்பத்தி செய்யும்.

10 மில்லியன் யூனிட் மின்சாரம்

1 மெகாவாட் திறனுடைய காற்றாலையில் இருந்து ஆண்டுக்கு 18 லட்சம் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. காற்றாலைகளின் இறக்கைகள் சராசரியாக 25 மீட்டர் நீளம் உள்ளது. காற்று வீசும் திசைக்கு ஏற்ப அவை மாறிக்கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. உடுமலை சுற்றுப்பகுதிகளில் தற்போது சராசரியாக நாள் ஒன்றுக்கு 10 மில்லியன் யூனிட் மின்சாரம் உற்பத்தியாகிறது. இதை தமிழக அரசு 1 யூனிட்டுக்கு ரூ.3.50 விலை நிர்ணயம் செய்துள்ளது. காற்றாலை மூலம் பெறப்படும் மின்சாரம் துணை மின்நிலையங்கள் மூலம் தொழிற்சாலை உள்ளிட்ட தேவைகளுக்காக வினியோகம் செய்யப்படுகிறது.

தினகரன்

**குமரியில் வெள்ள அபாய எச்சரிக்கை**




நாகர்கோவில் : குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. இதனால் அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. நேற்று காலை நிலவரப்படி பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 71 அடியை எட்டியது. இதனால், கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக மாவட்ட பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறுகையில், '77 அடி கொள்ளவு கொண்ட பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 71 அடியை கடந்துள்ளதால் அணைக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**மொத்த விலை பணவீக்கம் -4.54%**




புதுடெல்லி: நாட்டின் மொத்த விலை பண வீக்கம் கடந்த செப்டம்பர் மாதத்தில் -4.54 சதவீதமாக உள்ளது. இது ஆகஸ்ட் மாதத்தில் -4.95 சதவீதமாக இருந்தது. பருப்பு வகைகள், வெங்காயம் மற்றும் காய்கறிகள் விலை உயர்வு இதற்கு காரணமாகும். இருப்பினும் கடந்த ஆண்டு

நவம்பரில் இருந்தே 11 மாதமாக பண வீக்கம் சரிவடைந்து வருகிறது. வெங்காயம் பண வீக்கம் 113.7%, பருப்பு வகைகள் 38.56 சதவீதம் என உள்ளது. இருப்பினும் பிற உணவு வகைகளான முட்டை, இறைச்சி, மீன், பால், கோதுமை விலை சரிவடைந்துள்ளது. கடந்த செப்டம்பரில் சில்லரை விலை பண வீக்கம் 4.41 சதவீதமாக உயர்ந்திருந்தது.

**கோதுமை இறக்குமதி வரி 25%ஆகிறது**



புதுடெல்லி: உள்நாட்டில் கோதுமை உற்பத்தி அதிகமாகவே இருக்கிறது. இருப்பினும் தரமான கோதுமை தேவையை காரணம் காட்டி அதிகமாக இறக்குமதி செய்யப்படுகிறது. இதை தடுக்க கடந்த மாதம் அரசு 2006ம் ஆண்டுக்கு பிறகு முதன்முறையாக 10 சதவீத கோதுமை இறக்குமதி வரியை விதித்தது. இருப்பினும் கோதுமை உற்பத்தியாளர் வேண்டுகோளுக்கு இணங்க இந்த வரியை 25 சதவீதமாக உயர்த்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாகவும், வருவாய் துறையுடன் இன்று நடக்கும் ஆலோசனையில் இது முடிவு செய்யப்படும் எனவும் மத்திய அரசு அதிகாரி ஒருவர் கூறினார்.

**பறக்கும் பருப்பு வகைகளின் விலை : சமாளிக்க முடியாமல் திணறும் இல்லத்தரசிகள்**



சென்னை: பண்டிகை காலம் நெருங்கும் வேளையில் பருப்பு வகைகளின் விலை கிடுகிடுவென உயர்ந்து வருவதால் இல்லத்தரசிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர். கிலோ ரூ.140க்கு விற்கப்பட்ட துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பின் விலை தற்போது ரூ.200-க்கும் மேல் விற்பனையாகிறது. ஆயுத பூஜை, தீபாவளி போன்ற பண்டிகைகள் நெருங்கும் வேளையில் திடீரென பருப்பு வகைகளின் விலை ரூ.50க்கும் மேல் உயர்ந்திருப்பதால் மக்கள் கடும் அதிர்ச்சியடைந்துள்ளனர். சமீப காலமாக காய்கறிகள், பால், பருப்பு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலை தொடர்ந்து ஏறுமுகமாக இருப்பதால், பண்டிகைகளை கொண்டாட முடியாத சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளதாக வேதனை தெரிவித்தனர். புரட்டாசி மாதம் என்பதால் பெரும்பாலாகனார் சைவ உணவையே சமைத்து வருகின்றனர். தற்போது அசைவ வகைகளை காட்டிலும் பருப்புகளின் விலை கடுமையாக உயர்ந்திருப்பதாக புகார் தெரிவித்துள்ளனர். இந்த கடுமையான விலை உயர்வால் தற்போது நடுத்தர மக்கள் பருப்பு வகைகளை வாங்க முடியாமல் திணறுவதாக கவலை தெரிவித்துள்ளனர்.

**வெம்பக்கோட்டை ஒன்றியத்தில் மழை குறைந்து வருவதால் சுருங்கி வரும் பாசனப் பரப்பு**

சிவகாசி, : வெம்பக்கோட்டை ஒன்றியப் பகுதியில் கடந்த 6 ஆண்டுகளாக தொடர்ந்து மழை அளவு குறைந்துகொண்டே வருவதால் விவசாயப் பாசன பரப்பு சுருங்கி வருகிறது. வெம்பக்கோட்டை ஒன்றியத்தில் 10 ஆயிரத்து 500 ஹெக்டேர் பரப்பு விவசாய நிலங்கள் உள்ளன. இதில் 8 ஆயிரத்து 767 ஹெக்டேரில் மானாவாரியாகவும், ஆயிரத்து 733 ஹெக்டேரில் நீர்ப்பாசன முறையிலும் விவசாயப் பணிகள் நடந்து வருகின்றன. மானாவாரி நிலங்கள் அதிகம் இருப்பதால் இங்குள்ள விவசாயிகள் பருவமழையை நம்பியே சாகுபடிப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். வெம்பக்கோட்டை ஒன்றியப் பகுதியில் கடந்த 6 ஆண்டுகளுக்கு முன் சராசரியாக ஆண்டுக்கு 850 மி.மீ மழை பெய்து வந்தது. இதன் பின்னர் பருவமழை சரிவரப் பெய்யவில்லை. மழை பெய்யாததால் பாசனப் பரப்பு தொடர்ந்து சரிந்து கொண்டே வருகிறது. கடந்த 6 ஆண்டுகளாக மழை பொழிவது குறைந்து வருவதால் விவசாய நிலங்களில் பாசனப் பரப்பு பெருமளவு சரிந்து விட்டது. 2008ம் ஆண்டில் 8 ஆயிரத்து 400 ஹெக்டேரில் சாகுபடிப் பணிகள் நடந்தன.கடந்த 2009ல் மக்காச்சோளம் 223 ஹெக்டேர், நெல் 336 ஹெக்டேர், சோளம் 286, கம்பு 183, ராகி 19, உளுந்து 332, தட்டைப்பயறு 184, எள் 54, சூரிய காந்தி 285, பருத்தி 476, தீவனச் சோளம் 770, என 5900 ஹெக்டேர் பரப்பில் மட்டுமே சாகுபடிப் பணிகள் நடந்தன. இந்நிலையில் இந்த ஆண்டும் மழையின்றி வெம்பக்கோட்டை அணை வறண்டு கிடக்கிறது. பருவமழை குறைந்துகொண்டே வருவதால் விவசாயிகள் கடும் பாதிப்புக்கு உள்ளாகி மாற்றுத் தொழிலை நாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

**பிளவக்கல் பெரியாறு அணையை திறக்க விவசாயிகள் கோரிக்கை**

வத்திராயிருப்பு, : வத்திராயிருப்பு அருகேயுள்ள பிளவக்கல் பெரியாறு, கோவிலாறு அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கடந்த சில நாட்களுக்கு முன் மழை பெய்தது. இதையடுத்து நீர்மட்டம் வேகமாக

உயர்ந்து வருகிறது. 47 அடி உயரமுள்ள பெரியாறு அணையில் தற்போதைய நீர்மட்டம் 44.56 அடி. நீர்வரத்து வினாடிக்கு 58.56 கனஅடியாக உள்ளது.பெரியாறு அணையின் நீர்மட்டம் அபாய அளவை எட்டிய நிலையில் தண்ணீரை திறந்து விடக்கோரி விவசாயிகள் பொதுப்பணித் துறையினருக்கு கோரிக்கை விடுத்தனர். முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டால்தான் அணையை திறக்க முடியும் என அதிகாரிகள் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.மழை திடீரென பெய்து அணைக்கு நீர்வரத்து அதிகமானால் தண்ணீரை அப்படியே திறந்துவிடும் நிலை உள்ளது. எனவே, உடனடியாக பிளவக்கல் பெரியாறு அணையை பாசனத்துக்காக திறந்துவிட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## ஒட்டுமொத்த விற்பனை விலை அடிப்படையிலான பணவீக்கம் மைனஸ் 4.54 சதவீதம்: தொடர்ந்து 11 மாதங்களாக சரிவு



நாட்டின் ஒட்டுமொத்த விற்பனை விலை அடிப்படையிலான பண வீக்கம் தொடர்ந்து 11 மாதங்களாக குறைந்து வருகிறது. செப்டம்பர் மாதத்தில் பணவீக்கம் மைனஸ் 4.54 சதவீதமாக இருந்தது. இது முந்தைய மாதமான ஆகஸ்டில் மைனஸ் 4.95 சதவீதமாக இருந்தது.

பணவீக்கம் தொடர்ந்து மைனஸ் நிலையில் குறைந்திருந்தாலும் வெங்காயம், பருப்பு ஆகியவற்றின் விலை தொடர்ந்து ஏறுமுகமாகவே உள்ளது. 2014-ம் ஆண்டு செப்டம்பரில் பணவீக்கம் 2.38 சதவீதமாக இருந்தது. இந்த வார தொடக்கத்தில் வெளியான நுகர்வோர் விலை அடிப்படையிலான பணவீக்கம் 4.41 சதவீதமாக உள்ளது. இது முன்பு 3.74 சதவீதமாக இருந்தது.

ஒட்டுமொத்த விற்பனை விலை அடிப்படையிலான (டபிள்யூபிஐ) பணவீக்கமும், நுகர்வோர் விலை அடிப்படையிலான (சிபிஐ) பண வீக்கமும் செப்டம்பரில் குறைந்து பெரும் நெருக்குதலை ஏற்படுத்தி யுள்ளது. வெங்காயத்தின் விலை முந்தைய மாதத்தில் (ஆகஸ்ட்) 65.29 சதவீதமாக இருந்தது செப்டம்பரில் 113.70 சதவீதமாக உயர்ந்துள்ளது. இதேபோல பருப்புகளின் விலை 36.40 சதவீதத்திலிருந்து 38.56 சதவீதமாக உயர்ந்துள்ளது.

கோதுமை விலையும் 2.05 சதவீதத்திலிருந்து 3.34 சதவீதமாக அதிகரித்துள்ளது.

பொதுவாக உணவுப் பொருள் களைப் பொருத்தமட்டில் ஆகஸ்டில் 1.13 சதவீதமாக இருந்தது செப்டம் பரில் 0.69 சதவீதமாக சரிந்துள்ளது.

அதேசமயம் பதப்படுத்தாத உணவுப் பொருள்களின் பணவீக்கம் 0.69 சதவீதத்திலிருந்து 2.61 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதற்கு முக்கியக் காரணம் எண்ணெய் வித்துகளின் விலை அதிகரித்ததே.

புரதம் நிறைந்த உணவுப் பொருள்களான பால், முட்டை, இறைச்சி, மீன் ஆகியவற்றின் விலை சற்று உயர்ந்தே இருந்தது. ஆண்டுக்காண்டு கணக்கீட்டின் அடிப்படையில் பால் விலை 2.16 சதவீதம் உயர்ந்துள்ளது.

இதேபோல முட்டை, இறைச்சி, மீன் ஆகியவற்றின் விலை 2.02 சதவீத அளவுக்கு உயர்ந்துள்ளது. உருளை உள்ளிட்ட காய்கறிகளின் விலை குறைந்துள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சகம் வெளியிட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட் டுள்ளது.

ஒட்டுமொத்த விற்பனை விலை அட்டவணையில் உற்பத்திப் பொருள்களின் பங்கு 65 சதவீத மாக உள்ளது. இத்தகைய பொருள் களின் விலை 1.73 சதவீதமாக இருந்தது. ஆகஸ்ட் மாதத்தில் இது 1.92 சதவீதமாக இருந்தது.

**விவசாயிகளே, தலை நிமிர்ந்து நில்லுங்கள்: தசராவைத் தொடங்கி வைத்த கம்பீர விவசாயி**



***சரியான அணுகுமுறையால் நிலையான வருமானத்தை ஏற்படுத்திக் கொண்ட விவசாயி புட்டையா, தன் சகாக்கள் மத்தியில் தனித்து நிற்கிறார்.***

குத்தகை விவசாயி ஒருவரின் மகனான புட்டையா இன்று வெற்றிகரமான விவசாயி ஆக மாறி, மைசூரு தசரா விழாவைத் தொடங்கி வைத்திருக்கிறார். பிரபலமல்லாத ஒருவர், இவ்விழாவைத் தொடங்கி வைப்பது இதுவே முதல் முறை. இதன் மூலம் தனது சக விவசாய நண்பர்களுக்கு எடுத்துக்காட்டாக மாறி இருக்கிறார்.

மைசூரு, ஹெக்காடாதேவனா பகுதியைச் சேர்ந்த 67 வயதான புட்டையா செவ்வாய்க்கிழமை சாமுண்டி மலையில் தன் வாழ்க்கைப் பயணம் குறித்துப் பேசினார்.

"விவசாயிகள் சிறு, குறு மற்றும் நீண்ட கால பயிர்கள் மூலம், தங்களின் வருமானத்தை நிலையாக வைத்திருக்க வேண்டும். அதோடு, தினசரி விவசாயம் மூலம், தினசரி வருமானத்தையும் ஈட்ட வேண்டும். என்னுடைய வெற்றிக்குப் பின்னால், தினசரி, வார, மாத, மூன்று மாத, ஆறு மாத மற்றும் வருட வருமானம் உள்ளடங்கி இருக்கிறது.

பால் விற்பனை மூலம் தினசரியும், காய்கறிகள் விற்பனை மூலம் வாரம் ஒரு முறையும், தேங்காய் மூலம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையும் வருமானம் ஈட்டுகிறேன். ஆறு மாதத்துக்கு ஒரு முறை பருப்பு வகைகள் மூலமும் (குறிப்பாக அவரை), வருடத்துக்கு ஒருதடவை கரும்பு, மஞ்சள் மற்றும் இதர பயிர்கள் மூலமும் வருமானம் வருகிறது. இவற்றின் மூலம், எனது குடும்பத்துக்கு நிலையான, சீரான வருமானத்தை என்னால் சம்பாதிக்க முடிகிறது.இவையோடு, செம்மறியாடு மற்றும் வெள்ளாடுகளையும் வளர்த்து வருகிறேன். அவற்றின் மூலம் ஆண்டுதோறும் 5-ல் இருந்து 6 லட்சம் வரை கிடைக்கிறது" என்றார்.**ஒரு முறைகூட கடன் வாங்கியதில்லை**ஆச்சரியமாக, புட்டையா இதுவரை விவசாயத்துக்காக ஒரு தடவைகூட கடன் வாங்கியதில்லை.வருடத்துக்கு ஒன்றாக அவருடைய எட்டு ஆழ்துளைக் கிணறுகளும் வற்றிப் போனபோது கூட, அவர் கடன் வாங்கவில்லை.

நான்கு ஏக்கரில் தனது விவசாயத்தைத் தொடங்கியவர், இப்போது நாற்பது ஏக்கர்கள் நிலத்துக்குச் சொந்தக்காரராக இருக்கிறார்.

*வெற்றியாளராக நடைபோடும் புட்டையா தனது சக விவசாயிகளுக்குச் சொல்லும் செய்தி இதுதான்*"**ஒருங்கிணைந்த விவசாயத்தைக் கையிலெடுங்கள்; தைரியத்தைக் கைவிடாதீர்கள். இடையூறுகளைச் சந்திக்கத் தேவையான தைரியத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். தற்கொலை எந்தக் காலத்திலும், உங்களின் பிரச்சனைக்குத் தீர்வாகாது".**

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

# தொடர்ந்து நீர்வரத்து அதிகரிப்பு: கும்பக்கரை அருவியில் பயணிகள் குளிக்க தடை



பெரியகுளம், அக்.15-

தேனி மாவட்டம், பெரியகுளம் அருகே சுமார் 8 கிலோமீட்டர் தூரத்தில் கும்பக்கரை அருவி அமைந்துள்ளது. இந்த அருவி இயற்கை எழில் சூழ மேற்கு தொடர்ச்சி மலைஅடிவார பகுதியில் அமைந்து உள்ளது. இந்த அருவிக்கு கொடைக்கானல் மலைப்பகுதி மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் இருந்தும் நீர் வரத்து இருக்கும். இந்த அருவிக்கு ஆண்டுதோறும் நீர்வரத்து இருக்கும். தமிழகம் மட்டுமின்றி பல்வேறு மாநிலங்களிலிருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து குளித்துவிட்டு செல்வார்கள். அருவி பகுதி மற்றும் கொடைக்கானல் மலைப்பகுதியில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக அருவியில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. எனவே சுற்றுலாப்பயணிகள் குளிக்க வனத்துறையினர் தடை விதித்துள்ளனர். இதனால் அருவிக்கு வந்திருந்த சுற்றுலாப்பயணிகள் இன்றும் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர். கடந்த ஒரு மாத காலமாக

நீர்வரத்து அதிகரிப்பதும், குறைவதுமாக உள்ளது. இதனால் அவ்வப்போது அருவியில் குளிக்க தடை விதிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## குமரியில் சாரல் மழை நீடிப்பு: பேச்சிப்பாறை அணை 40 அடியை எட்டியது



நாகர்கோவில், அக். 15-

குமரி மாவட்டத்தில் கொட்டி தீர்த்து வரும் கனமழையினால் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன. மாம்பழத்துறையாறு, முக்கடல் அணைகள் முழு கொள்ளளவை எட்டி உள்ளது. பாசன குளங்களும் நிரம்பி வருகின்றன. 686 குளங்கள் முழு கொள்ளளவை எட்டி உள்ளது. 469 குளங்கள் 75 சதவீதமும், 479 குளங்கள் 50 சதவீதமும், 406 குளங்கள் 25 சதவீதமும் நிரம்பி உள்ளது.பேச்சிப்பாறை, பூதப்பாண்டி, மயிலாடி, முள்ளங்கினாவிளை பகுதியில் நேற்றிரவும் மழை பெய்தது. மலையோர பகுதியான பாலமோர் பகுதியில் பெய்து வரும் மழையினால் பேச்சிப்பாறை அணைக்கு வரக்கூடிய நீர்வரத்து அதிகரித்து உள்ளது. பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் இன்று காலை 40 அடி எட்டியது. அணைக்கு 1,022 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 71.20 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 342 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து 50 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

சிற்றாறு-1 அணையின் நீர்மட்டம் 16.40 அடியாகவும், சிற்றாறு-2 அணையின் நீர் மட்டம் 16.50 அடியாகவும், பொய்கை அணையின் நீர் மட்டம் 11 அடியாகவும் உள்ளது. அணைகள் நிரம்பி வருவதையடுத்து குழித்துறை ஆற்றின் கரையோர பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.திற்பரப்பு அருவியில் வெள்ளம் ஆர்ப்பரித்து கொட்டி வருகிறது. 4-வது நாளாக சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர்.